www.padippakam.com


# ஈழ தேசம்

மலர் 1 ஏப்ரல்-1996 இதழ்-8


# யாழ்ப்பாணத்தை கைப் பற்ற சூரிய கதிர் இரண்டு



யாழ்ப்பாணத்தின் எஞ்சிய பகுதியையும் பிடிக்கும் நோக்குடன் சிங்கள இராணுவம் 'சூரிய கதிர் 2' எனும் பெயரில் மற்றுமொரு தாக்குலை 19.4.96 அன்று தொடங்கி உள்ளது. ஏற்கனவே 'சூரிய கதிர் 1' எனும் பெயரில் சென்ற வருடம் அக்டோபரில் மேற்கொண்ட தாக்குதலின் மூலம் யாழ்ப்பாணத்தின் ஒரு பகுதியை கைப்பற்றினர். சூரிய கதிர் ஒன்றின் தாக்குலின்போது நூற்றுக்கணக்கான உயிரையும், உடமைகளையும் இழந்து பல இலட்சக்கணக்கான மக்கள் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறி சொந்த மண்ணிலேயே அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

இப்போது 'சூரிய கதிர் இரண்டு' என்ற மற்றுமொரு தாக்குதல் தொடங்கப்பட்டுள்ளது. வடமராட்சி, தென்மராட்சி பகுதியிலிருந்த பெரும்பாலான மக்கள் ஏற்கனவே வெளியேறி விட்டனர். சிங்கள இராணுவத்தின் தாக்குதலை தாக்குப் பிடிக்க முடியாது என்று கருதிய புலிகளும் வெளியேறியதால் அதிக சேதாரம் இன்றி சிங்கள இராணுவம் முன்னேறி வருகின்றது. முன்னேறி வரும் சிங்கள இராணுவம் எதிர்ப்பு வருகிறதோ, இல்லையோ தங்களின் பாதுகாப்புக் காரணத்திற்காக மக்கள் குடியிருப்புக்களைத் தரைமட்டமாக்கி வருகிறது.

மேஜர் ஜெனரல் ரோஹன் தலுவத்த தலைமையில் ஒரு இலட்சம் இராணுவத்தினர் இத்தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். 'சூரிய கதிர் 1' தாக்குதல் இவர் தலைமையிலேயே நடந்தது என்பது குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணத்திலும் அதன் அண்டை மாவட்டமான கிளிநொச்சியிலும் அரசு காலவரையற்ற ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்துள்ளது. அத்துடன் திரு. ஆரிய ருஹசிங்கா தலைமையில் தணிக்கைக் குழு ஒன்றும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவால் நியமிக்கப்பட்டுள்ளது. யுத்தம் தொடர்பான செய்தித் தணிக்கை உடனடியாக அமுலுக்கு வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணக் குடா நாட்டின் கழுத்துப் பகுதியில் அமைந்திருக்கும் ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்தும் தென்மராட்சி நோக்கி இராணுவம் தாக்குதலைத் தொடங்கி உள்ளது. யாழ்ப்பாணத்துடன் இணைக்கும் இப்பகுதியை கைப்பற்றுவதன் மூலம் ஏனைய பிரதான பகுதியிலிருந்து யாழ்ப்பாண குடாவை துண்டித்து விடலாம். தென்மராட்சியுடன் தொடர்பு கொள்ளக்கூடிய அனைத்து வழிகளும் அடைக்கப்பட்டுவிடும். 'சூரிய கதிர் 1' தாக்குதலின்போது மக்கள் இவ்வழியாகத்தான் கிளிநொச்சிக்குத் தப்பிச் சென்றனர். இப்போது வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளிலிருக்கும் எஞ்சிய மக்கள் வெளியேறுவதற்கு வழி இன்றி உள்ளனர்.

வடமராட்சி, தென்மராட்சி பகுதியிலிருந்து புலிகள் ஏற்கனவே வெளியேறி விட்டதால் இப்பகுதிகளை அதிக இழப்பு இன்றி சிங்கள இராணுவம் கைப்பற்றும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இப்பகுதிகளைக் கைப்பற்றுவதுடன் யாழ்ப்பாண குடாநாடு முழுமையாக சிங்கள இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும். ஆனையிறவு, பூநகரி ஆகிய பகுதிகள் இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதால், தென்மராட்சியின் ஒரு பகுதியையும் இராணுவம் கைப்பற்றி விட்டால் புலிகளால் யாழ்ப்பாண குடா நாட்டுக்குள் பாரிய தாக்குதலை நடத்த முடியாமல் போகும். 'சூரிய கதிர் 2' தாக்குதலுக்குப்பின் பாதுகாப்புக்கு என இராணுவத்தினரை யாழ்ப்பாணத்தில் நிறுத்திவிட்டு, கிழக்கில் பாரிய தாக்குதலை மேற்கொள்ள இராணுவம் திட்டமிட்டுள்ளது.

'சூரிய கதிர் 2' தாக்குதலை யாழ்ப்பாணத்தில் சிங்கள இராணுவம் மேற்கொள்ளும்போது புலிகள் கிழக்கைத் தாக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. புலிகளைச் சமாளிக்க ஏனைய தமிழ் குழுக்களை கிழக்கில் ஆயுதபாணிகளாக்கி உள்ளார் அம்மையார். ஆயுதப் போராட்டத்தை கைவிட்டு விட்டதாக கூறி வந்த EPRLF இப்போது மட்டகளப்பில் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டுள்ளது.

## குமாரபுரத்தை தொடரும் நாச்சிகுடா

சிங்களக் காடையர்களும் இராணுவத்தினரும் சேர்ந்து குமாரபுரத்தில் நடத்திய கொடூரமான தாக்குதலின் துயரில் இருந்து ஈழத் தமிழர்கள் மீழ்வதற்குள் மன்னார் மாவட்டத்தில் தமிழ் மக்கள் அதிகம் வாழும் நாச்சிகுடாவில் கோழி கூவும் வேளையில் ஊரே அமைதியாக உறங்கிக் கொண்டிருந்த அதிகாலை நேரம் பார்த்து இனவெறி பிடித்த சிங்கள விமானப்படை விமானங்கள் திடீரென இப்பகுதி மீது கண்மூடித்தனமாகக் குண்டுகளை வீசித் தாக்கினர். இத்தாக்குதலினால் சிறுவர் சிறுமியர் குழந்தைகள் உட்பட 16 பேர் உறக்கத்திலேயே சிதறடித்துக் கொல்லப்பட்டுள்ளனர். 55 பேர் படுகாயமடைந்துள்ளனர். இறந்தவர்களைவிட மிக மோசமான முறையில் கண்களை இழந்து கை கால்களையும் இழந்துள்ளனர். இவர்களும் இறந்திருக்கலாம் என்று கூறும் அளவுக்கு காயப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு உடனடியாக மருத்துவ் சிகிச்சை வழங்கும் அளவுக்கு மன்னார் மாவட்டத்தில் மருத்துவ வசதிகள் இல்லாததால் காயம்பட்டவர்கள் அனைவரும் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளனர். இதனால் இப்பகுதி வைத்திய சாலைகள் நிரம்பி வழிகிறது.

சமாதானத்திற்காக யுத்தத்தையும் அரசியல் தீர்வுக்காக யோசனைகளையும் தேடிக் கொண்டிருக்கும் சந்திரிகா சிங்களவர்கள் மத்தியில் பகை உணர்வையும் யுத்த வெறியையும் ஊட்டத் தவறவில்லை. இதனால் இன்று இலங்கையில் ஒரு விதமான இனவெறி தலை தூக்கியுள்ளது. இது எப்படிச் சமாதானத்தை விரும்புவோரின் செயலாக இருக்க முடியும். ஈழத் தமிழ் இனத்தை எவ்வளவு கொடுமைப்படுத்துகிறார்கள் என்பதை ஒன்றன் பின் ஒன்றாக இவர்கள் நடத்தும் இன அழிப்புக்கள் இன்று வரை உலகிற்கு உணர்த்தவில்லையா?

**ஈழ மக்களின் இதயக் குரல்**

www.padippakam.com



# அகதிகள் பக்கம்



## மோசமடைந்து வரும் ஈழத் தமிழ் அகதிகளின் அவலங்கள்

பா. இராஜரத்தினம்

யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்கு குடி பெயர்ந்த அகதிகளின் நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்து வருகிறது. கிளிநொச்சியில் ஒரு இலட்சத்தி எண்பத்தி ஐயாயிரமாக இருந்த சனத் தொகை இப்போது 4 இலட்சமாக உயர்ந்துள்ளது. மேலும் அண்மையில் நாச்சிகுடா பகுதியில் இலங்கை விமான படை நடாத்திய தாக்குதலின் விளைவாக மன்னாரியிலிருந்தும் மக்கள் பாதுகாப்புத் தேடி கிளிநொச்சியை நோக்கிப் படைபெயடுத்து வருகின்றனர். யாழ்ப்பாணத்தின் வடமராட்சியில் மீண்டும் பாரிய தாக்குதலை நடத்த சிங்கள அரசு திட்டமிட்டுள்ளது. இத்தாக்குதல் ஏப்ரல் மாதப் பிற்பகுதியில் மேற்கொள்ளப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இப் பாரிய தாக்குதலை எதிர்கொள்ளப் புலிகளால் முடியாதென்பதால் வடமராட்சியில் இருந்து மக்களை வெளியேறும்படி புலிகள் அறிவித்துள்ளனர். ஏற்கனவே சிங்கள இராணுவம் கைப்பற்றிய யாழ்ப்பாணம் பகுதியில் இருந்து மக்கள் வெளியேறி விட்டனர். இப்போது எஞ்சிய பகுதிகளிலிருந்தும் வெளியேறி வன்னியை நோக்கி மக்கள் நகரத் தொடங்கி விட்டனர்.

ஏற்கனவே குடிநீர் பற்றாக்குறை, மருத்துவ வசதியின்மை, சுகாதாரச் சீர்கேடு இட நெருக்கடி போன்ற பிரச்சனைகள் இருந்து வரும் வன்னிப் பிரதேசத்தில் இப்போது மீண்டும் யாழ்ப்பாணத்திலிருந்தும் மன்னாரிலிருந்தும் மக்கள் வரத் தொடங்கி இருப்பது நிலைமையை இன்னும் மோசமடையச் செய்யும்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் 124 அகதி முகாம்கள் உள்ளன. இந்த முகாம்களில் 70,000 மக்கள் அகதிகளாக உள்ளர். இதனை விட உறவினர் மற்றும் நண்பர்களின் வீடுகளிலும் இலட்சக்கணக்கான மக்கள் தங்கி உள்ளனர். உறவினர்கள் மற்றும் நண்பர்களின் நிலங்களில் ஒரு குடிசை போடக்கூட முடியாத நிலையில் இவர்கள் உள்ளனர். குடிசை போடத் தேவையான மரங்கள் அல்லது தடிகள் எடுக்க காடுகளுக்குப் போக முடியாத நிலை, சொந்தக் காணியில் உள்ள மரங்களை வெட்டுவதற்குப் புலிகளுக்கு வரி செலுத்த வேண்டும், தவறினால் தண்டனைக்குள்ளாக்கப்படுவார்கள். ஒரு சோடிக் கிடுகின் விலை ரூபா 30 திலிருந்து 40 வரை போகிறது. யாழ்ப்பாணத்திலிருந்து புலிகள் கொடுத்த இரண்டு மணி நேர அவகாசத்தில் எந்த உடமையையும் எடுக்க முடியாமல் கால்நடையாக வந்து சேர்ந்தார்கள், அன்றாட வாழ்க்கையை ஒட்டுவதற்கே திண்டாடும் இவர்கள் குடிசை போடக்கூட முடியாமல் தவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மூன்று ஆரம்ப வைத்தியசாலையும் மூன்று மத்திய மருந்தகமும், சாவகச்சேரியில் ஒரே ஒரு ஆரம்ப வைத்தியசாலையும் உள்ளது. ஆயினும் இவைகள் இயங்காமல் உள்ளது. போதியளவு மருத்துவர்களும் தாதிகளும் இல்லாதது மட்டுமல்ல மருந்துகளுக்கும் பெரும் தட்டுப்பாடு உள்ளது. சாதாரண தலைவலிகளுக்கு பனடோல் வாங்குவதானால் கூட ஒரு வில்லைக்கு மூன்று ரூபா கொடுக்க வேண்டும். சுகாதாரச் சீர்கேடின் விளைவால் ஏற்படும் நோயினால் இது வரை 62 பேர் இறந்துள்ளதாக கிடைக்கப் பெற்ற தகவல்கள் கூறுகின்றது. பெரும்பாலும் வயிற்றோட்டமும் மலேரியாவும் பாரியளவில் மக்களை தாக்குகிறது. தற்போது நாச்சிகுடாவில் தாக்குதலுக்கு உள்ளானவர்களும் கிளிநொச்சிக்கு கொண்டு வரப்பட்டுள்ளனர்.

வன்னியில் மக்கள் அதிகரித்துள்ளதால், அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கும் பற்றாக்குறை அதிகரித்துள்ளது. உணவுப் பற்றாக்குறைக்கு அரசுதான் காரணம் என்று அரசாங்க அதிபரைக் கைகாட்டி விட்டனர் புலிகள். அரசாங்க அதிபர்களின் விடா முயற்சியினால் ஓரளவு உணவுப் பொருட்கள் கொண்டு வரப்படுகிறது. கடந்த பல வாரங்களாக உணவு பொருட்கள் ஏற்றி வரும் லாரிகளை தாண்டிக்குளத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. அதற்கு காரணம் புளோட் (PLOTE) குழு நடத்தும் அடாவடித்தனம்தான். சிங்கள இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிதான் தாண்டிகுளம். இங்கிருக்கும் சோதனைச்சாவடியில் சிங்கள இராணுவத்துடன் இணைந்து புளோட் குழுவினரும் சோதனை செய்து வருகின்றனர். கிளிநொச்சிக்குச் செல்லும் அனைத்து வாகனங்களும் இந்தச் சோதனைச் சாவடியைக் கடந்துதான் செல்ல வேண்டும். இந்த சோதனைச் சாவடியை கடந்து செல்லும் ஒவ்வொரு லாரியும் புளோட் குழுவினருக்கு ரூபா 3000/- செலுத்தும்படி வற்புறுத்தப்படுகின்றனர். லாரி உரிமையாளர்கள் புளோட் இயக்கத்திற்கு இதனைச் செலுத்த மறுத்ததால் லாரிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. ஒரு சோடி கிடுகு ரூபா 30க்கும் 40க்கும் கிடைக்காமல் போகும் நிலையில் கப்பம் செலுத்த மறுத்ததால் லாரிகளிலிருந்த கிடுகுகளை பிளாட் குழு பறித்து வைத்துள்ளது. இது தொடர்பாக ஒப்பந்தக்காரர்கள் வவுனியாவில் உள்ள இராணுவ உயர் அதிகாரியைச் சந்தித்து முறையிட்டுள்ளனர். அதற்கு இராணுவ அதிகாரி தன்னால் செய்வதற்கு ஒன்றுமில்லை. புளோட் இயக்கத்துடன் பேசித் தீர்த்துக் கொள்ளும்படி அனுப்பி விட்டார். புளோட் இயக்கத்தினருக்கு கப்பம் செலுத்த மறுத்ததால் மக்களுக்கு எடுத்துச் செல்லப்படும் அத்தியாவசியப் பொருட்கள் தாண்டிக்குளத்தில் முடங்கியுள்ளது. இதனால் கிளிநொச்சியிலும் வன்னிப் பிரதேசத்திலும் மக்கள் பெரிதும் அவதிக்குள்ளாகி உள்ளனர். இப்பிரச்சனையை அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்றுள்ளார் கிளிநொச்சியின் அரசாங்க அதிபர் திரு. தில்லை நடராசா.

வடக்கிற்கு செல்லும் லாரி உரிமையாளர்களிடம் கொழும்பில் ஈ.பி.டி.பி பணம் பறிக்கிறார்கள். வவுனியா சோதனைச் சாவடியில் சிங்கள இராணுவம் தங்களுக்கு தேவையான பொருட்களை எடுத்துக் கொள்கின்றனர். தாண்டிக்குளத்தில் புளோட் குழுவினர் கொஞ்சம் பணத்தைப் பறித்து விடுகிறார்கள். அதற்கு அப்பால் வரி எனும் பெயரில் புலிகள் ஒரு தொகையினைப் பறித்து விடுகிறார்கள். லாரி உரிமையாளர்களும் ஒப்பந்தக்காரர்களும் ஈ.பி.டி.பி. பிளாட் சிங்கள இராணுவம் புலிகள் ஆகியோரிடம் பறி கொடுக்கும் பணத்தை நொந்து போய் அகதியாக உள்ள மக்களிடம் அறவிடுகின்றனர். அத்தியாவசியப் பொருட்கள் வடமாகாணத்தில் விலை அதிகரிப்புக்கு இதுவே முக்கிய காரணமாகும். தலைக்கு வைக்கும் தேங்காய் எண்ணை கூட போத்தல் ரூபா 325க்கு விற்கப்படுகிறது.

அரசு சார்பற்ற தொண்டு நிறுவனங்களைப் பாதிக்கப்பட்ட பகுதியில் செயல்பட சந்திரிகா அரசு அனுமதி மறுத்துள்ளது. இதனால் தொண்டு நிறுவனங்களில் கிடைக்கக் கூடிய உதவிகளும் தடைப்பட்டுள்ளது. தொலைத் தொடர்பு சாதனம் பொருத்தி இயங்க அரசு அனுமதி மறுத்தால் சேவையை நிறுத்திக் கொள்ளப் போவதாக UNHCR அறிவித்துள்ளது. அகதிகளுக்கான சேவையில் ஈடுபட்டுள்ள ஒரே ஒரு தொண்டு நிறுவனமான UNHCR சேவையை நிறுத்திக் கொண்டால் மக்களின் அவலம் வர்ணிக்க முடியாத அளவுக்கு மோசமடையும்.

மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டு வரும் ஈழத் தமிழ் மக்களைக் காப்பாற்ற நல்லெண்ணம் கொண்ட அனைத்து நாடுகளும் முன்வர வேண்டும். குறிப்பாக ஈழத் தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் இந்தியா மௌனத்தை கலைத்து விட்டு தார்மீக கடமையைச் செய்ய முன்வர வேண்டும். ●

## குடிதண்ணீருக்கு தடை!

கிளிநொச்சி மாவட்டத்தில் அகதிகளாக முகாம்களில் பல விதமான துன்பங்களையும், துயரங்களையும் படுமோசமான கஸ்ரங்களிலும் எதிர்கொண்டு பல கொடூரமான நோய்களால் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இதே வேளையில் இப்பகுதியில் மிக மோசமான வறட்சி ஏற்பட்டுள்ளது. இதனால் கிணறுகள், குளங்கள் எல்லாம் வற்றிப் போய்விட்டன. குடிதண்ணீர் இல்லாமல் இந்த மக்கள் வற்றிய குளங்களையும், வற்றுகின்ற கிணற்றையும் தேடி அலைகின்றனர் குடி தண்ணீருக்காக. மிருகங்கள் மற்றும் அனேகமான பிராணிகள் தண்ணீர் இல்லாமல் நாளுக்கு நாள் இறந்த வண்ணம் உள்ளன. சில குளங்களில் சேற்றுடன் கூடிய தண்ணீரை வடித்து எடுத்து தங்களுக்கு அப்போது ஏற்படும் தாகத்தை தீர்த்துக் கொள்கின்றனர். அசுத்தமான தண்ணீரைக் குடிப்பதால் பின்விளைவுகளை இவர்கள் எதிர்பார்க்கவில்லை. இப்படியான இக்கட்டான சூழ்நிலையில் தான் பெரும்பாலான மக்கள் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குடிதண்ணீருக்காகத் திண்டாடும் மக்களுக்கு உதவி செய்வதற்காக நல்லெண்ணம் கொண்ட தொண்டு நிறுவனமான நொவீப் 200 குழாய்க் கிணறுகள் அமைத்துக் கொடுத்து ஓரளவு தண்ணீர்ப் பிரச்சனையைத் தீர்த்து வைக்க ஒழுங்குகள் செய்து அனைத்து உபகரணங்களையும் வவுனியா வரை கொண்டு வந்த வேளையில், அனைத்தையும் நிறுத்தும்படி சிங்கள அரசின் ஜனாதிபதியான சந்திரிகா தடை விதித்துள்ளார். வேறு இடங்களில் இருந்தும் லாரி வண்டிகள் மூலம் தண்ணீர் கொண்டு வருவதற்கும் மறுப்புத் தெரிவித்துள்ளனர். பொதுவாக தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படும் இந்த மக்களுக்கு தண்ணீர் வழங்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இப்படியான இன்னல்களை ஒன்றன் பின் ஒன்றாக ஏற்படுத்தி சோறு, தண்ணீர் இல்லாமல் பட்டினியால் வாட்டி வதைத்தால் ஈழப் போராட்டத்தைக் கைவிட்டு விடுவார்கள். இப்படியான வழியில் தான் இவர்களை ஒடுக்க முடியும் என்று நினைத்து விட்டார்போல் இந்த உன்னத அம்மையார். எப்படியான அராஜகவாதியும் குடிப்பதற்கு தண்ணீர் கொடுக்காமல் இருக்க மாட்டான். சோமாலியாவில் மக்கள் பட்டினியால் வாடிச் செத்தது போன்று ஈழத் தமிழர்களையும் பட்டினியால் வாட்டி வதைத்து போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து விடலாம் என்று எண்ணியுள்ளார் கிட்லரின் வாரிசான அதிபர் சந்திரிகா.



ஆண்டு அனுபவித்த தமிழ் ஈழத்திலே அழிவின் விளிம்பில் இன்று ஈழத் தமிழர்கள்.

படிப்பகம்

# தமிழர் தாயகத்தை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை

# சந்திரிகா

சென்ற இதழ் 'ஈழ தேசத்தில்' சந்திரிகா முன்வைத்தது இனப் பிரச்சனைக்கான தீர்வுத் திட்டமல்ல, அது நாடு முழுவதற்குமான நிர்வாகப் பரவலாக்கல்தான் என்று கூறியிருந்தோம். எமது கூற்று எத்தகைய உண்மையுடையது என்பதனை இலங்கையின் நீதி அரசியலமைப்பு விவகார அமைச்சரும் பிரதி நிதியமைச்சருமான ஜீ.எல். பீரிஸ் உறுதிப்படுத்தி உள்ளார்.

விவசாயத் திணைக் களத்தின் தொழிற் சங்கங்களின் ஒன்றிணைந்த முன்னணியினரால் கண்டியில் ஒழுங்கு செய்யப்பட்ட அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் தொடர்பாக விளக்கமளிக்கும் கூட்டத்தில் ஜீ.எல்.பீரிஸ் பேசியபோது, தமிழர்களின் தாயகக் கோட்பாட்டை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை என்றும், அப்படி ஏற்றுக் கொள்வதானால் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கே அதிகாரப் பரவலாக்கலை செயற்படுத்துவதற்கு நாம் முனைந்திருப்போம். நாட்டின் சகல பகுதிகளுக்கும் சமமான ரீதியில் அபிவிருத்தி செய்வதற்கே அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகக் கூறினார். மேலும் இதற்கு விளக்கம் அளிக்கும் வகையில், கொழும்பில் மட்டும் அதிகாரங்களைக் குவித்து வைத்திருக்காமல் பிராந்திய ரீதியாக அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டியது அவசியம் அதனால் முழு நாட்டிற்கும் சம வளங்கள் கிட்டும் என்றார். அமைச்சர் பீரிஸின் கூற்றின்படி சந்திரிகா முன் வைத்தது இனப் பிரச்னைக்கான தீர்வு அல்ல நாட்டின் அபிவிருத்திக்கான அதிகார பரவலாக்கலே என்பது ஊர்ஜிதமாகிறது.

அபிவிருத்திக்கான அதிகாரப்பரவலாக்கல் திட்டத்தில் கூட தமிழர்களின் பாரம்பரிய நிலங்களைப் பறிப்பதற்கு இத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் பீரிஸே ஒப்புக் கொண்டுள்ளார். வடக்கு கிழக்கு நிலங்களின் உரிமையை அப்பிரதேச நிருவாக்கத்திற்கு வழங்கப்படுவதால் சிங்கள மக்களுக்கு எவ்விதமான பாதிப்புகளும் ஏற்படாது. மத்திய அரசு நிலங்களை எந்த நேரத்திலும் கையகப்படுத்துவதற்கான சரத்துகள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாக சிங்கள மக்களுக்கு நம்பிக்கை அளித்துள்ளார். ஈழத் தமிழ் மக்கள் தங்களின் சொந்த நிலங்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் அதிகாரம் கொண்டவர்களாக இருக்க முடியாது என்பதே சந்திரிகாவின் தீர்வுத் திட்டத்தின் சாரம்சமாகும்.

மேலும் இந்த அதிகாரப்பரவலாக்கல் திட்டத்தில் புதிய அரசியல் சட்டத்தின் மனித உரிமைகள் சம்பந்தமான பிரிவின் கீழ்தான் இந்த அதிகாரம் இடம் பெறுவதாகவும் மனித உரிமைகள் சம்பந்தமான சரத்தில் சமத்துவமான கொள்கைக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறுகின்றார் அமைச்சர் பீரிஸ். ஒரு மொழி ஒரு இனம் வாழும் நாட்டில் மனித உரிமைகள் சம்பந்தமான பிரிவின் கீழ் சமத்துவமான கொள்கையின் அடிப்படையில் வேண்டுமானால் மாநிலங்களுக்கு அரசியல் சட்ட ரீதியான அதிகாரம் வழங்கலாம். சில நேரங்களில் பொருத்தமாகவும் இருக்கலாம். ஆனால் பல்லினங்கள் வாழும் நாட்டில் இது பொருத்தமற்றதாகவே இருக்கும். பல்லினங்கள் வாழும் நாட்டில் மனித உரிமைகள் அடிப்படையில் அல்லாமல் மொழி கலாசாரம் நிலம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு இன அடிப்படையிலான அதிகாரம் சட்ட ரீதியாக அமைவதே பொருத்தமானதாக இருக்கும். அமைச்சர் பீரிஸின் கூற்றின்படி இலங்கையில் ஒரே இனம் வாழ்வது போலவும், அதில் மனித உரிமைகள் பிரச்சனைதான் உள்ளது போன்றும் அதற்கு சமத்துவமான அதிகாரம் வழங்கப்படுவதுதான் தீர்வுக்கான வழி என்பது போலவும் பேசி உள்ளார்.

ஒரு சிங்கள அரசு முதல் முறையாக



ஜீ.எல்.பீரிஸ்

தமிழ் மக்களின் பிரச்சனைக்கு தீர்வு காண முன்வந்திருப்பதைத் தமிழ் புத்தி - ஜீவிகள் வரவேற்றுள்ளதாக அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மேலும் பேசி உள்ளார். இப்பேச்சின் மூலம் இலங்கையில் இருப்பது சிங்கள அரசே தவிர தமிழ் சிங்கள மக்களுக்கான பொதுவான அரசு அல்ல என்பது தெளிவாகிறது. அதிகாரப் பரவலாக்கல் திட்ட மசோதாவை இவ்வருட இறுதிக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து விடுவோம் என்று அமைச்சர் பீரிஸ் கூறுவதிலிருந்து இன்னும் 8 மாதங்கள் தள்ளிப் போடப் போவதை சூசகமாக தெரிவித்துள்ளார். இவ்வருட இறுதியில் இதேபோன்று இன்னொரு அறிக்கைவிடுவார் என்று நம்பகமாக எதிர்பார்க்கலாம்.

அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தை தமிழ் புத்தி ஜீவிகள் வரவேற்றுள்ளதாக பீரிஸ் குறிப்பிட்டுள்ளார். அந்த புத்தி ஜீவிகள் யாரென்று ஆராய்ந்து பார்த்ததில் கொழும்பில் உள்ள தமிழ் கட்சிகளை தான் குறிப்பிட்டுள்ளார் என்று புலனாகிறது.

சிங்கள அரசால் முன் வைக்கப்பட்டுள்ள அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தில் பிராந்தியங்களுக்கு அளிக்கப்படும் எந்தவொரு அதிகர்ரத்தையும் மத்திய அரசு திரும்ப பெறும் வகையில் கபடமாக திட்டத்தை தயாரித்துள்ளனர். இதனை ஜீ.எல். பீரிசும் பகிரங்கமாக ஒப்புக் கொண்ட நிலையில் கொழும்பில் உள்ள தமிழ் கட்சிகள் அதனை ஆதரிப்பது மன்னிக்க முடியாத துரோகமாகும்.

சந்திரிகா முன் வைத்துள்ள இந்த உருப்படாத திட்டத்துக்கு ஆதரவு தேடி PLOT, EPDP, EPRLF, TELO, EROS ஆகிய அமைப்புகளின் தலைவர்கள் கூட்டாக, ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சி தலைவருமான விக்கிரமசிங்காவை சந்தித்தனர். அத்துடன் ஒற்றையாட்சி முறையை வலியுறுத்த வேண்டாமென்றும் கேட்டுக் கொண்டுள்ளனர். அதற்கு விக்கிரமசிங்கா கட்சியில் பல கருத்துக்கள் நிலவுவதால் கட்சியுடன் ஆலோசித்த பின் பதில் சொல்வதாகக் கூறியிருக்கிறார். ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் இந்தத் தமிழ் கட்சிகள் தன்னை அண்டித்தான் பிழைப்பு நடாத்த வருவார்கள் என்பதனாலோ என்னவோ வந்த தமிழ்க் கட்சிகளை சமாளித்துப் பேசி அனுப்பி உள்ளார். அமைச்சர் பீரிஸின் வேண்டுகோளின் பேரில்தான் விக்கிரமசிங்காவை சந்தித்ததாக இந்தத் தமிழ் கட்சிகள் அறிக்கை வேறு விடுத்துள்ளனர்.

ஒற்றையாட்சி முறையில் மாற்றங் கொண்டு வரப்பட்டால் அதனை தீவிரமாக எதிர்க்கப் போவதாக ஐக்கிய தேசிய கட்சி தீர்மானித்துள்ளது. ஆதலால் சந்திரிகா முன் வைத்துள்ள தீர்வுத் திட்டத்தை ஐக்கிய தேசிய கட்சி நிராகரிப்பது திண்ணம். தமிழர்களுக்கு இது ஒன்றும் புதிது அல்ல. UNP கொண்டு வரும் திட்டத்தை SLFP எதிர்ப்பதும், SLFP கொண்டு வரும் திட்டத்தை UNP எதிர்ப்பதும் காலம்காலமாக இலங்கை வரலாற்றில் நடந்து வரும் போக்காகும்.

கொழும்பில் உள்ள தமிழ் குழுக்களுக்கு இந்த வரலாறு தெரியாதது அல்ல, வயிற்று பிழைப்புக்காக இனத்தையா விற்க வேண்டும். தமிழர் விடுதலை கூட்டணியோ அனுபவ ரீதியாக இவைகளை உணர்ந்தவர்கள் தான், என்ன செய்வது, அமிர்தலிங்கத்தை மட்டும் புலிகள் சுட்டுக் கொல்லவில்லை கூட்டணியின் உறுதி, தலைமை, தன்மானம் ஆகியவற்றையும் சேர்த்தே அழித்து விட்டனர்.

# முன் எப்போதும் இல்லாதளவு தமிழர் ஒடுக்கப் படுகிறார்கள்

நவ சம சமாஜ கட்சி

முன் எப்போதும் இல்லாதளவு அப்பாவித் தமிழர்கள் மீது திட்டமிட்ட தாக்குதல்களும் கொடுமைகளும் அதிகரித்துள்ளதாக நவ சம சமாஜா கட்சி (NSSP) ஜனாதிபதி சந்திரிகாவின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளது.

குமாரபுரத்தில் நடந்த தாக்குதலில் 25 பேர் கொல்லப்பட்டும் 32 பேர் காயமடைந்ததையும் சுட்டிக்காட்டப்பட்டதுடன் அகதி முகாம்களுக்கு பொறுப்பாக இருக்கும் UNHCR அதிகாரிகளுக்கு தெரியாமல் உப்பு வெளி கண்ணாடி தொழிற்சாலை அகதி முகாமிலிருந்த 500 தமிழ் அகதிகள் இராணுவத்தினரால் பலவந்தமாக வெளியேற்றப் பட்டுள்ளதை நவ சம சமாஜா கட்சி கண்டித்துள்ளது.

நல சம சமாஜ கட்சியின் தகவலின்படி நிலாவெளியிலிருந்த 25 தமிழ் குடும்பங்கள் இராணுவத்தினரால் பலவந்தமாக வெளியேற்றப்பட்டு குச்சவெளியில் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இராணுவ முகாமின் தேவைகளுக்காக கோமாரி கிராமத்தில் நிரந்தரமாகக் குடியிருந்த 25 தமிழ் குடும்பங்களும் பலவந்தமாக வெளியேற்றப்பட்டுள்ளனர். இதனால் இந்த குடும்பங்கள் தங்களின் வருமானத்தை இழந்து அன்றாட வாழ்க்கையை நடத்துவதற்கே மிகவும் கஷ்டப்படுகின்றனர்.



நவ சம சமாஜ கட்சியின் தகவலின்படி கிண்ணயடி கிராமத்தில் 125 தமிழர்களின் வீடுகள் இராணுவத்தினரால் எரியூட்டப் பட்டுள்ளது.

நூற்றுக்கணக்கான தமிழர்கள் வீடுகளிலும், வீதிகளிலும் தொழிற்கூடங்களிலும் கைது செய்யப்படும் நிலைமையையும் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளது நவ சம சமாஜ கட்சி.

நடைமுறையில் தமிழர் என்ற ஒரே காரணத்திற்காக தமிழர்கள் போலீசாராலும் படையினராலும் விருப்பம்போல் கைது செய்யப்பட்டு காவல் நிலையங்களிலும் தடை முகாம்களிலும் தடுத்து வைக்கப்படுகின்றனர். தாக்கப்பட்டுப் பல கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டு நீதிமன்றங்களிலும் நிறுத்தப்படுகின்றனர்.

வடக்கிலிருந்து கொழும்பு வரும் தமிழர்கள் தாண்டி குளத்தில் நியாயமற்ற முறையில் தடுத்து வைக்கப்படுகின்றனர். பயணத்திற்கான அனுமதி சீட்டு பெற ஒரு முகாமிலிருந்து இன்னொரு முகாமிற்கு அலைக்களிக்கப்படுகின்றனர். சில நேரம் காவல் துறையினராலும் சில நேரம் இராணுவத்தினராலும் இது கையாளப்படுகின்றது. இது காவல் துறையினரின் உதவியுடன் அரசாங்க அதிபரால் கையாளப்பட வேண்டிய சிவில் நிருவாகம் ஆகும். இராணுவத்தினரால் இது கையாளப்படக்கூடாது என்று நவ சம சமாஜ கட்சி கோருகிறது. இப்பிரச்சனை தொடர்பாக பாதுகாப்பு அமைச்சிடம் கேட்டதற்கு சரியான பதில் கிடைக்கவில்லை என அக்கட்சி கூறியுள்ளது.

ஏமாற்றத்தையும், வருத்தத்தையும் தரும் வகையில் 2000 பிரயாணிகளை வடக்கிற்கு திருப்பி அனுப்பியதால் நிலைமை இன்னும் மோசமடைந்துள்ளது. முன்னெப்



போதும் இல்லாதளவு ஒடுக்கு முறை இப்போது நடைபெறுவதாக நவ சம சமாஜ கட்சி ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

நவ சம சமாஜ கட்சி ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தின் பிரதி பத்திரிகைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

# வவுனியாவில் கிடுகுகள் தவம்

புளோட் இயக்கத்தினர் லொறிகளுக்கு வரிப்பணம் கேட்டு மேற்கொள்ளும் அடாவடித் தனங்களால் இடம் பெயர்ந்து இருக்க இடம் இல்லாமல் தவிக்கும் மக்களுக்கு குடிசைகள் அமைப்பதற்கெனக் கொண்டு வரப்பட்ட இரண்டு லட்சம் கிடுகுகள் வவுனியா கச்சேரி வளாகத்தில் தவம் கிடக்கின்றது. இந்தக் கிடுகுகளைக் கறையான்களிடம் இருந்து பாதுகாக்க உமி போட்டு அதன் மேல் அடுக்கி வைத்துள்ளனர். கிடுகுகளின் விலை மலைபோல் உயர்ந்துள்ளது. 100 கிடுகின் விலை 3 ஆயிரம் ரூபாவிற்கு விற்கப்படுகிறது. இந்த விலையில் வாங்கிக் குடிசை அமைக்கும் அளவுக்கு வசதியுள்ளவர்களாக எப்படி இருக்க முடியும்? அனைத்து உடமைகளையும் அப்படியே போட்டு விட்டு உயிர் மட்டும் தப்பினால் போதும் என்று அகதிகளாக ஓடிவந்து இன்று இருக்க இடமின்றித் தெரு ஓரங்களிலும் மரத்தின் கீழும் பரிதவிக்கும் இந்த தமிழ் மக்களுக்கு இவர்கள் செய்யும் பணிகளை எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியாது. இப்பகுதியில் அகதிகளாக இருக்கும் தமிழ் மக்கள் பழைய கிடுகுகளைப் புதுப்பிக்கும் முறையை இப்போது கையாண்டு வருகின்றனர். இந்த முறை ஏனையோருக்கும் பயிற்சிவிக்கப்படுகிறது.

ஆசிரியர் : சி. தயாபரன்
வெளியிடுபவர் : அ. குமரப்பன்
முகவரி : 6/7, பூர்ணிமா குடியிருப்பு,
இரண்டாவது பிரதான சாலை,
யுனைட்டெட் இந்தியா காலனி,
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

வரலாற்றின் தத்துவத்தை அறிய வேண்டும் ஈழத்தின் இளைய மைந்தர்கள்.


www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



# தமிழீழத்திற்கான அடிப்படையை அழிக்க வேண்டும்

ஒரு தேசிய இனமானது அதன் கலாச்சாரம், மொழி, பொருளாதார வாழ்வு ஆகியவை மூலம் இனங் காணப்படும்போது அங்கு நிலமானது முக்கிய பங்கினை வகிக்கிறது. தேசிய இனமென்கிற அடையாளத்தினை முற்றாக அழித்தொழிப்பதாயின் நிலப் பறிப்பு என்பது அவசியமாகக் கருதப்படும். இலங்கையின் முழு அரசு இயந்திரமும் இதற்கான வேலைத் திட்டங்களில் பங்கேற்கின்றன. பாரம்பரியப் பிரதேசக் கோட்பாட்டினைத் தமிழர் வரலாற்றில் இருந்து அகற்றுவதற்குப் பலாத்காரமாகச் செயல்பட்ட திரு. மலிங்க ஹேர்மன் குணரட்னே தமிழரின் பாரம்பரிய பிரதேசத்தை அபகரிக்கத் தீட்டிய சதித் திட்டத்தினை நாட்டின் சேவையாக வர்ணித்து 1990ம் ஆண்டு அவர் வெளியிட்ட அறிக்கையாகும். எம்.எச்.குணரட்னேவின் இந்தக் கட்டுரையை ஒவ்வொரு தமிழ் மகனும் படித்துத் தெரிந்திருக்க வேண்டும் என்பதனால் பிரசுரித்துள்ளோம்.




*மகாவலி நீர்பாசன அபிவிருத்தித் திட்டத்துக்காக தனியாக ஒரு அமைச்சகம் உருவாக்கப்பட்டது. இதன் அமைச்சராக காமினி திசநாயக்க நியமிக்கப்பட்டிருந்தார். மகாவலி அமைச்சகத்தில் வேலை செய்த மலிங்கா ஹேர்மன் குணரட்னேயின் தலைமையில் 40 சிங்கள அதிகாரிகள் 1983ம் ஆண்டு தெற்கிலிருந்து சிங்களவர்களை இரகசியமாக கொண்டு வந்து, தமிழர் பிரதேசமான கிழக்கில் குடியேற்றினார்கள். அரசுக்குத் தெரியாமல் இந்தக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டதால் இவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதாக அரசு அறிவித்தது. இதனால் மகாவலி அதிகார சபையின் பொது இயக்குனரும் U.N.P கட்சியின் தலைவராகவும் இருந்த பண்டிதரட்னே தன் வேலையை இழந்தார். இவ்வமைச்சின் அமைச்சராக இருந்த காமினி திசநாயக்க மீது ஜெயவர்த்தனே அதிருப்தி கொண்டிருந்தார். ஜே.ஆர்.ஜெவர்த்தனேயின் மகனான ரவி ஜெயவர்த்தனே இந்த இரகசிய குடியேற்றத்துக்கு ஆதரவு வழங்கினார். ரவியின் தலைமையில் அப்போது பச்சைப் புலிகள் எனும் ஒரு சிறு இராணுவப் படைப் பிரிவு கிழக்கில் இயங்கி வந்தது. குணரட்னே மீது அரசு நடவடிக்கை மேற்கொண்டபோது அவரைக் காப்பாற்ற பலர் முன்நின்று உழைத்தனர். அதில் மலையகத் தமிழ் மக்களின் தலைவராகக் கருதப்பட்ட தொண்டைமானும் ஒருவராவர்.*

*மலிங்கா ஹேர்மன் குணரட்னே தமிழர்களின் நிலத்தை திட்டமிட்டு ஆக்கிரமித்ததை நியாயப்படுத்தி ஒரு செய்தியை 1990ம் ஆண்டு ஆவணி மாதம் வெளியிட்டார். அதனின் தமிழாக்கமே இது.*

மண்ணுக்கும் எல்லைகளுக்கும், சில நேரங்களில் தண்ணீருக்கும் போர்கள் நடைபெறுகின்றது. மதப் போர்களும் மனித வரலாற்றில் இடம் பெறுவது உண்டு. ஒழுங்கு முறைகளை விடப் போர்கள் ஏற்புடையதாக இருந்து வந்துள்ளது.

குவைத்தைக் கைப்பற்றிய சதாம் உசேனின் நோக்கம் கட்டிடங்களைச்சேதப்படுத்தவும் அமீரை கைது செய்யவும் அல்ல. எண்ணை வளம் நிறைந்த குவைத் நிலத்தை ஆக்கிரமிக்கும் நோக்கமாகவே இருந்தது.

இலங்கை புலிகளுடன் யுத்தத்தில் ஈடுபட்டு உள்ளது. இதன் தன்மையை புரிந்து கொள்ள முயற்சியுங்கள். அரசியல் தீர்வுகள், இன ஒடுக்குமுறை, மூல உபாயமான இடங்கள், .அரசியல் சார்ந்தவை போன்ற வார்த்தைகள் தொடர்பு சாதனங்களிலும் படித்தவர்களாலும் பிரயோகப்படுத்தப்படுகின்றது. இவைகள் உங்களை தெளிவுபடுத்துகின்றதா? அல்லது சிக்கல்களும் குழப்பங்களும் உண்டாக்குகிறதா என்பதனை வாசகர்கள் தீர்மானித்துக் கொள்ளட்டும். என்ன காரணத்திற்காக புலிகள் யுத்தம் செய்கிறார்கள்? புத்தளத்தின் வடக்கே உள்ள புத்தளம், மன்னார் வவுனியா - முல்லைத்தீவு மட்டகளப்பு யாழ்ப்பாணம் அம்பாறை திருகோணமலை உள்ளடக்கிய பிரதேசத்தை தனி நாடு உருவாக்கவே. இதனை துப்பாக்கி மூலம் பலாத்காரமாக நிறைவேற்ற முயலுகிறார்கள். இன்னொரு வகையில் சொல்லப் போனால் இப்பிரதேசங்களில் அரசின் ஆளுமையை இல்லாமல் செய்வதாகும். ''ஈழம்'' என்று குறிப்பிடப்படும் பிரதேசம் கிட்டதட்ட 18,307 சதுர கிலோ மீட்டர் கொண்ட நிலப்பரப்பாகும். ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 111 நபர்கள் கொண்டதே ஈழம். நியாயம் உள்ள எந்த அரசாவது இதனை அனுமதிக்குமா? நியாயமற்ற இந்த தீவிரக் கோரிக்கைக்கு என்ன அரசியல் தீர்வு காண முடியும்?

மறு கையில் பலாத்காரமற்ற விட்டுக் கொடுப்புடன் ஒரு அரசியல் தீர்வுக்கு புலிகள் தயாரா? இல்லை என்பதே அவர்களின் மூர்க்கமான பதிலாக இருக்கும். எப்படிப்பட்ட ஈழத்தை இவர்கள் அடையப் போகிறார்கள்? பலகாலமாக அங்கு வாழ்ந்து வந்த அப்பாவிச் சிங்களவர்களையும் முஸ்லிம்களையும் கொலை செய்து, விரட்டியும் விட்டனர். மொழி பற்றிப் புரியாதவர்களின் மொழியில் சொல்லப் போனால், தமிழ் மக்களை உள்ளடக்கிய தொடர்ச்சியான நிலப்பரப்பை அடைவதற்காகவே இப்படி செய்கிறார்கள்.

## அகதிகள்

குறிப்பிடப்படும் தமிழர்களின் பாரம்பரிய பிரதேசத்திலிருந்து சிங்களவர்களையும் முஸ்லிகளையும் மெல்ல மெல்ல ஆனால் உறுதியாக வெளியேற்றும் முறை தெளிவாக புரிகிறது. புலிகளின் கொடூர செய்கையினால் யாழ்ப்பாணத்திலிருந்து 16,000 பேர்கள், கிளிநொச்சியிலிருந்து 5,000 பேர்கள், மட்டக்களப்பிலிருந்து 3,000 பேர்கள், மன்னாரிலிருந்து 7,000 பேர்கள் முல்லைத்தீவிலிருந்து 4,000 பேர்கள், அகதிகளாக உள்ளனர். திரும்ப வரக்கூடாது என்று விரட்டப்பட்டவர்கள். ஒவ்வொரு நாளும் சிங்களவர்களும் முஸ்லிம்களும் அகதிகளாக வந்த வண்ணம் உள்ளனர்.

ஈழத்துக்கு வெளியே உள்ள நிலப்பரப்பு 46,344 சதுர கிலோ மீட்டரில், ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 276 பேர்கள் வீதத்தில் உள்ளது. ஈழத்தில் தமிழ் மக்கள் மட்டும் உள்ளனர். தெற்கில் எல்லா இன மக்களும் இருப்பதால் நில நெருக்கடி இருந்து வருகிறது. பெரும் வீதாசாரத் தமிழ் மக்கள் தெற்கிலும் இருக்கின்றனர். அண்மையில் எடுக்கப்பட்ட ஆய்வின்படி கொழும்பில் தமிழர்கள் அதிகரித்து வருகின்றனர். ஈழத்துக்கு வெளியே சனத் தொகை வீதாசாரம் 236 நபர்களாக இருந்தாலும், பெரும்பாலும் பயன்படுத்த முடியாத நிலமே உள்ளது. தெற்கில் தேயிலைத் தோட்டம், இரப்பர் தோட்டம், தென்னந் தோட்டம், தொழில்வளப் பேட்டை, தேசிய பூங்கா வனத்துக்கு ஒதுக்கப்பட்ட காணிகளே உள்ளது. தேயிலைத் தோட்டங்கள் முழுவதிலும் தமிழர்களே உள்ளனர்.

நாட்டின் சனத் தொகையில் 12 சதவீதம் கொண்ட தமிழ் மக்கள் 40 சதவீத நிலத்துக்காகப் போராடுகிறார்கள். இந்தப் 12 சதவீதம் முழுமையாக ஈழத்தில் வாழ்பவர்கள் அல்ல. நாட்டின் 60 சதவீதமான கடற்கரை ஈழத்துக்குள் வருகிறது. இவையே எம்முன் உள்ள பிரச்சனையாகும்.

1983-84 மகாவலி அமைச்சில் இருந்த நாம், தமிழர்கள் போராட்டத்தில் ஈடுபட முன்னரே இதனை உணர்ந்து கொண்டோம். உணர்ந்தது மட்டுமல்ல இதற்கு ஏதாவது செய்தாக வேண்டும் என்றும் தீர்மானித்தோம். சிறையில் அடைந்திருத்தல், நெடுநேர விசாரணை, வேலை இழந்தமை போன்ற விலைகளை இதற்காக கொடுக்க வேண்டி இருந்தது. இவைகள் எல்லாம் பழைய் சம்பவங்கள் ஆனதில் மகிழ்ச்சி அடைகிறேன். நாங்கள் தவறு செய்தோம் என்பதனை இப்போதும் என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

## குடியேற்றம்

1983 இனக் கலவரத்துக்கு முன்னரே யான் ஓயாவிலும் மல்வத்த ஓயாவிலும் சிங்களவர்களைக் குடியேற்றத் திட்டம் வகுத்திருந்தோம். சர்வதேச அளவில் உயர்ந்த அந்தஸ்தில் இருந்தவர்கள் மிகவும் ஆர்வமாகத் திட்டத்தை வகுத்துத் தந்தார்கள். என்னுடைய பங்கு அதனை நடைமுறைப்படுத்தியதே.

குடியேற்றத்திற்கான திட்டம் மகாவலி அமைச்சகத்தில் இரகசியமாக ஆரம்பிக்கப்பட்டது. இங்கு கடமையாற்றிய தமிழர்கள் தங்களின் சக்திக்கு உட்பட ஈழத்துக்காக வேலை செய்தனர். ஆகவே இங்கு அறிவார்ந்த யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

தேசியத்திற்கான மேடையை இனக் கலவரம் ஏற்படுத்திக் கொடுத்தது. பிரிவினைவாதிகள் இந்த குடியேற்றத்தை சட்ட விரோதமானது என்று குழப்பாமல் இருப்பதற்காகச் சிறு தொகையினரைக் குடியேற்றுவதே எமது முதல் திட்டமாக இருந்தது. நம்பிக்கையுடன் 45,000 சிங்கள மக்கள் மதுறு ஓயாவில் நிலம் தேடி வந்தனர். இது கையாழ்வதற்கு பெரும் தொகையாக இருந்தது.

பிரிந்து போகாமல் ஒன்றாக வாழ்வது என்ற தத்துவமே எமக்கு வழிகாட்டியாகும். ஆனால் பிரிவினை வாதிகளும் அவர்களின் உள்ளூர் மற்றும் இந்திய பொதுத் தொடர்பு சாதன அடிவருடிகளும் ஏனைய சக்தி வாய்ந்த அதிகாரங்களும் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவை இந்தக் குடியேற்றங்களை அகற்ற வைத்தது.

தனிப்பட்ட முறையில் எங்களுக்கு ஏற்பட்ட இன்னல்களையிட்டு நாம் கவலை கொள்ளவில்லை. குடியேற்றப்பட்டவர்களை விரட்டியதுதான் எமக்கு வேதனையைத் தந்தது. குடியேற்றங்கள் தொடர்ந்து நடைபெற்றிருந்தால் இன்றைய நிலை வேறாக இருந்திருக்குமோ என்னவோ அதனை வாசகர்களே தீர்மானிக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட இந்த குடியேற்றங்கள் தொடர்பாக இன்றுபோல் அன்றும் பிரிவினைவாதிகளின் பிரச்சாரத் தரகர்கள் எழுதினார்கள். அவர்களுக்குத் தெரியும் புலிகளைக் கொலை செய்வதால் ஈழக் கோரிக்கை அடங்கி விடாது, ஆனால் ஈழத்துக்கான அடிப்படையையே அழிக்கப் பட்டு விடுமென்று.

இந்தத் திட்டத்தை மேற்கொண்டவர்கள் எதிர்காலத்தைப் பார்த்தார்கள். ஈழம் என்பது நிலம்தான் என்பதனைப் புரிந்து கொண்டார்கள். ஆகவே தனி ஒரு இனத்துக்கு என்று நிலம் இல்லாமல் அனைவரும் பங்கிடும் வகையில் நிலம் இருக்க வேண்டும். அதனால் நான் செய்தவைக்காக வருத்தப்படவில்லை.

இரத்தத்தையும், உயிர்களையும் பலி கொள்ளும் இந்த பயங்கரப் பிரச்சனைக்கு இது நிரந்தரத் தீர்வாக அமையாதா?

நீண்ட காலத்துக்கு இலங்கையின் இறைமையையும் எல்லைகளையும் பாதுகாக்கும் வகையில் ஒரு திட்டம் தீட்டி நடைமுறைப்படுத்த எண்ணிணோம். தெற்கில் நிலப் பசி கொண்ட 45,000 சிங்கள விவசாயிகளை மட்டக்களப்பு மற்றும் பொலநறுவ மாவட்டத்தில் அமைந்திருந்த மதுரு ஓயா நீர்ப்பாசனக் காணியில் குடியமர்த்தினோம். இரண்டாவது படியாக இதனைப் போன்ற குடியேற்றத்தை யான் ஓயாவிலும் மூன்றாவது படியாக ஈழத்தை எதிர்க்கின்றவர்களை மல்வத்து ஓயாவிலும் குடியமர்த்தத் திட்டமிட்டோம்.

## துரதிஷ்டம்

ஜனாதிபதி ஜெயவர்த்தனேயின் ஆட்சிதான் துரதிஷ்டமானது. தூக்கமில்லாத இரவுகள், மோசமான இருட்டுக் காவல் நிலைய அறைகள், வேலை இழந்தமை

**ஒரு தேசிய இனமானது கலாச்சாரம், மொழி, பொருளாதார வாழ்வு, நிலம் ஆகியவை மூலம் இனங்காணப்படுகின்றது.**

படிப்பகம்

www.padippakam.com



ஆகியவற்றிற்காக நாம் வருந்தவில்லை. நாம் திட்டமிட்டுக் குடியேற்றியவர்களை விரட்டியதுதான் எமக்கு வேதனையை தருகிறது. நாம் குடியேற்றம் செய்த அதே நிலத்தில்தான் இன்று பயங்கரவாதிகளின் முகாம்கள் உள்ளன.

பிரிவினைக்கு எதிரானவர்களை மட்டக்களப்பில் உள்ள மதுருஓயாவில் குடியேற்றுவதே எமது நோக்கம். இதனால் கிழக்கு மாகாணத்தை கூறுபோட்டுப் பிரித்திருக்கும், குறிப்பாக மட்டக்களப்பை திருகோணமலையிலிருந்தும், வட மாகாணத்திலிருந்தும் பிரித்திருக்கும். இந்தக் குடியேற்றம் திருகோணமலை, யான்ஓயா, பதவியா ஆகியவற்றை உள்ளடக்கி ஒன்றாக இருந்திருக்கும்.

வடக்கிலிருந்து பயங்கரவாதிகள் மதுரு ஓயா ஊடாகத்தான் மட்டக்களப்புக்கு சாதாரணமாகப் போய் வருகிறார்கள். பெரும் குடியேற்றத்தைச் செய்வதால் இந்த நடமாட்டம் சாத்தியமில்லாமல் போய்விடும். இந்தப் பகுதியின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்ட பிரிவினைவாதிகளும் மட்டக்களப்பில் குடியேற்றம் செய்ய முயற்சிகள் எடுத்தனர். அதனால்தான் இந்தக் குடியேற்றத்தைச் செய்தோம்.

திருகோணமலையை வர்த்தக வலையமாக்கி மக்களை அந்தத் துறைமுக நகரத்தில் குடியேற்றும்படி அரசுக்கு சிபார்சு செய்தோம். இங்கு கடற்படைக் கல்லூரி ஒன்று நிறுவவும் முத்து குளிக்கும் இடமாக மாற்றவும் எண்ணினோம்.

யான் ஓயா எனும் ஆறு திருகோணமலைக்கு வடக்கே ஓடி திரியாய் கடலில் கலக்கிறது. பிரிவினைவாத யுத்தத்தில் இந்த இடமும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. யான் ஓயா பள்ளத்தாக்கு அபிவிருத்தி செய்யப்படாத பிரதேசமானதால் அதன் முக்கியத்துவத்தைப் பிரிவினைவாதிகள் நன்கு உணர்ந்திருந்தனர். அதனால் இங்கு சட்ட விரோதமான குடியேற்றங்களைப் பயங்கரவாதிகள் திரியாயிலிருந்து யான் ஓயா ஆற்றங்கரை வரை செய்ய முனைந்தார்கள்.

## மாற்றுத்திட்டம்

யான்ஓயா பள்ளத்தாக்கில் பிரிவினைக்கு எதிரானவர்களை குடியேற்றி இருந்தால் அந்த மாவட்டத்தின் சனத்தொகை 50,000 ஆகப் பெருகி இருக்கும், இதனால் திருகோணமலையை தீவிரவாதிகளிடமிருந்து முற்று முழுதாகப் பாதுகாத்திருக்கலாம். யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்கும் மட்டகளப்புக்கும் இடையிலான தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருக்கும். அத்துடன் பதவியாவிலிருக்கும் குடியேற்றமும் இதனால் பலப்பட்டிருக்கும். இன்று இந்தத் தொடர் கடற்கரையால்தான் பயங்கரவாதிகள் யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்கும் பின் மட்டக்களப்புக்கும் செல்கின்றனர்.

யான் ஓயா ஆற்றுக்கு குறுக்கே அணைக்கட்டு கட்டி குடியேற்றங்களைச் செய்யும்படி அரசாங்கத்துக்கு பலமாக சிபார்சு செய்தோம். இதுதொடர்பான ஆரம்ப வேலைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மதுரு ஓயா, யான்ஓயா ஆகிய இரு குடியேற்றத் திட்டங்களினால் ஈழத்தின் தொடர்ச்சியான நிலப்பரப்பைத் துண்டித்து, அழிக்கப்பட்டிருக்கும். நாங்கள் ஈழத்தின் அடிப்படையையே அழித்திருப்போம்.

மூன்றாவது முன்னுரிமை மல்வத்த ஓயாவாகும். மல்வத்த ஓயா குடியேற்றத் திட்டத்தை நடைமுறைப்படுத்தினால் பிரிவினைவாதிகளின் வடக்கின் ஒரு தொகுதியான மன்னாரை வடமேற்கு மாவட்டத்திலிருந்து முழுமையாகத் துண்டித்திருக்கலாம்.

ஈழத்துக்கான அடிப்படையை அகற்றி இருக்கலாம். பதவியா குடியேற்றத் திட்டத்தின் இணைப்புத்தான் வெலி ஓயா. பதவியா குடியேற்ற வாசிகளின் இரண்டாவது மூன்றாவது தலைமுறையினர் இந்தப் பகுதியை ஆக்கிரமித்துள்ளனர்.

இன்று வெலிஓயா முக்கியமான மூல உபாய இடமாக திகழ்கிறது. இங்கு குடியேற்றப்பட்டவர்களைப் பயங்கரவாதிகள் தங்களால் இயன்ற எல்லா வழிகளிலும் வெலிஓயா குடியேற்ற வாசிகளை கொலை செய்தும் அவ்விடத்திலிருந்து விரட்டவும் முயன்று வருகிறார்கள். இதற்கு காரணம் ஈழத்தின் தொடர்ச்சியான நிலப்பரப்பை வெலிஓயா துண்டிப்பதால்தான். வெலிஓயா குடியேற்றத் திட்டமும் எங்களால் ஸ்தாபிக்கப்பட்டதே.

பின்நாளில் ஜனாதிபதி ஜெயவர்த்தனேயின் மகன் ரவியை நான் சந்தித்தபோது இந்த குடியேற்றத் திட்டத்தின் முக்கியத்துவத்தை புரிந்து கொண்டார். அடுத்து நடக்க வேண்டியதை அவர் மேற்கொண்டார். குடியேற்றப்பட்ட சிங்களவர்களுக்கு இராணுவப் பயிற்சியும் ஆயுதங்களும் வழங்கினார். பயங்கரவாதிகள் அடைய நினைக்கும் ஈழத்துக்கு குறுக்கே இருப்பது இந்த குடியேற்றங்களும் பயிற்றப்பட்ட ஆயுதம் தரித்தவர்களும் தான். அனைத்துப் பேச்சுவார்த்தையின் போதும் சரி, உடன்பாடுகள் ஏற்படும் போதும் சரி வெலிஓயாவில் குடியேற்ற வாசிகளின் ஆயுதங்களைத் திரும்பப் பெறும்படியும், குடியமர்த்தப்பட்டவர்களை வெளியேற்றும்படியும் கோருகின்றனர்.

ஈழத்துக்கு எதிரான நேரடியான மாற்றுத் திட்டம் குடியேற்றங்களை அதிகரிப்பதுதான் என்று ரவி ஜெயவர்த்தனேயும் தொடர்ந்து வற்புறுத்தினார். இந்தக் குடியேற்றப் பிரதேசங்களில் பணப்பயிரை அபிவிருத்தி செய்ய வகை செய்யும்படி அரசாங்கத்தை வற்புறுத்தினோம். நெற் செய்கையினால் போதியளவு வருமானம் கிடைக்காததினால் பயங்கரவாதிகளின் மிரட்டலுக்கு விவசாயிகளினால் ஈடுகொடுக்க முடியவில்லை.

இவைகளைச் செய்ததினால் பிரச்சனைகளில் சிக்குண்டு காவல் நிலையங்களின் நான்கு சுவர்களுக்கிடையில் அடைபட்டு இருந்தோம்.

போரில் ஈடுபட்டிருந்த இரு உயர் இராணுவ அதிகாரிகளிடம் பேசினேன். அந்த இருவரும் ஐக்கிய இலங்கையில் ஈடுபாடும் உறுதிப்பாடும் கொண்டவர்களாக இருந்தனர். அதில் ஒருவரிடம் அவரின் தெளிவான முடிவு என்ன என்று கேட்டோம். அதற்கு கிடைத்த பதில் ''வடக்கு கிழக்கு நிலப்பரப்பில் உள்ள பயங்கரவாதிகளை ஒழித்து, நிலைமையை அரசின் கட்டுப்பாட்டுக்குள் மீண்டும் கொண்டு வந்து அமைதியை ஏற்படுத்துவதுதான்.''

இன்று இப்பகுதியில் தொடர்ந்து சண்டை நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. குறிப்பாக கிழக்கு புலிகளின் கட்டுப்பாட்டில் இல்லை. ஆயினும் தாக்கிவிட்டு காட்டுக்குள் மறைவதையும் கொடூரமாக அப்பாவிகளைக் கொலை செய்வதையும் தடுக்க முடியவில்லை. ''எப்படிக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும்,'' என்று கேட்டோம். ''இன்னும் மிகுதி பயங்கரவாதிகளைக் கொலை செய்யும் வரை காத்திருக்க வேண்டும்,'' என்றனர். அதற்கு நான், ''எவ்வளவு காலம் ஆகும்,'' என்று இரண்டாவது கேள்வியை கேட்டேன். ''மிக மிக நீண்ட காலம்,'' என்று சோகமாகச் சொன்னார். ஆகவே இந்த யுத்தத்திற்கு உடனடியானத் தீர்வு இல்லை.

## ஆயுதபாணிகளாக ஆக்கப்பட்ட குடியேறிகள்

''எவ்வளவு காலம் பயங்கரவாதிகள் சண்டை போடப் போகிறார்கள்,'' என்று இன்னொரு இராணுவ உயர் அதிகாரியிடம் கேட்டேன். ''ஈழம் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கும் வரை தொடரும்,'' என்றார். ''ஈழம் சாத்தியமில்லை என்று அவர்கள் உணர என்ன செய்ய வேண்டும்,'' என்று கேட்டேன். உடன் வந்த பதில், ''ஈழத்துக்கான அடிப்படையை அழிப்பது தான்,'' என்பதாகும். ''நீங்கள் சொல்வதின் அர்த்தம் என்ன,'' என்று கேட்டேன். ''மல்வத்த ஓயா, யான் ஓயா, மதுரு ஓயா ஆகிய இடங்களில் குடியேற்றங்களைச் செய்து, தொடர்ச்சியாகத் தமிழர்கள் வாழும் நிலப் பகுதியைத் துண்டிப்பதுதான். ஈழம் அமைக்கப் போராடும் நிலப் பகுதியில் சிங்களவர்களையும் இஸ்லாமியர்களையும் குடியேற்றுவதுதான்,'' என்று பதில் அளித்தார். இங்கே யுத்தத்தில் ஈடுபடும் ஒவ்வொருவரும் என் கருத்தையே எதிரொலிக்கிறார்கள். இந்த யுத்தத்திற்கு நாள் ஒன்றுக்கு 35 மில்லியன் செலவாகிறது. கடவுளுக்குத்தான் தெரியும் இன்னும் எவ்வளவு காலத்துக்கு இந்த செலவு தொடரும் என்று.

யான் ஓயா, மதுரு ஓயா, மல்வத்த ஓயா ஆகிய குடியேற்றத் திட்டத்துக்கு ரூபா 10,000 மில்லியன் செலவாகும். இது துப்பாக்கிக்கும் யுத்தத்திற்கும் செலவு செய்யும் பணமல்ல. ஆனால் அபிவிருத்திக்கான அடித்தளத்துக்கு உண்டாகும் செலவுதான். துப்பாக்கி வேட்டுகளுக்கு முகம் கொடுக்க குடியேறியவர்களை ஆயுத பாணிகளாக்க வேண்டியது அவசியமே. இதைத் தவிர வேறு வழி இல்லை.

J.V.P. புரட்சியை தெற்கு இருமுறை சந்தித்து உள்ளது. புரட்சி செய்தவர்களின் கோரிக்கை என்ன? நிலமும் நிலமற்ற தன்மையும்தான். இவர்களுக்கு வழங்குவதற்கு தெற்கில் நிலமில்லை. ஈழம் என்று குறிப்பிடும் பகுதியில்தான் சனத்தொகை அதிகமில்லாமல் நிலம் உள்ளது. ஆகவேதான் இப்பகுதியில் குடியேற்றங்களைப் பகிரங்கமாகவும் அவசரமாகவும் செயல்முறையில் செய்யப்பட வேண்டும்.

இரவின் இருட்டில் மறைந்திருந்து வேலை செய்கிறோம். ஒரு அரசாங்கம் இப்படி செய்ய வேண்டிய அவசியமில்லை, இறைமை கொண்ட இலங்கையில் யார் எங்கு வேண்டுமானாலும் குடியேறலாம் என்ற ஒரே கொள்கையின் பாதுகாப்பில் இதனை அரசாங்கம் செய்யலாம்.

ஜனாதிபதி பிரேமதாசா சத்திய பிரமாணம் எடுக்கும்போது நான் காலியில் உள்ள இராணுவ முகாமில் இருந்தேன். ஐக்கிய இலங்கையில் பிரேமதாசா தெளிவாக இருப்பதை அவரின் ஆரம்பப் பேச்சிலிருந்து தெரிந்து கொண்டேன்.



**Phase II: Five new provinces**

Sunday Times Graphics

பிரேமதாசாவால் நியமனம் பெற்ற துணை பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரட்ணாவைச் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அவரைச் சந்தித்தபோது விக்கிரமசூரிய அடிக்கடி சொல்வது ஞாபகத்துக்கு வந்தது. அவர் சொல்லுவார், ''ஒரு வேலை ஆக வேண்டுமானால் வேலை பளுவான வரை அணுகவும். அவர் செய்து கொடுப்பார்,'' ரஞ்சன் விஜயரட்ணா வேலை பளு உள்ளவர். ஆயினும் தனி மனிதனாகப் பார்த்தால் நிதானமாகவும் நேர்மையாகவும் இருந்தார். புகழுரை வார்த்தைகளும் தத்துவ வார்த்தைகளுக்கும் ஆட்படாமல் நடைமுறைக்கேற்ப நடப்பவர். சாதனையாளர்களிடம் இருக்கும் தகுதி அவரிடம் இருந்தது. அதுதான் மற்றவர்கள் சொல்வதையும் கேட்பது.

இந்த இரத்தம் சிந்தும் யுத்தத்திற்கு குடியேற்றம்தான் தீர்வு என்றால் அதனை இராணுவ அமைப்பு ஜனாதிபதிக்குச் சொல்ல வேண்டும். இனிமேல் நாம் விளையாடிக் கொண்டிருக்க முடியாது. பாராளுமன்றத்தில் இருக்கும் எதிர்க்கட்சியினர் இதனை :பாதிட முன்வர வேண்டும். இதுதான் செய்ய வேண்டும் என்று தீர்மானத்தால் பகிரங்கமாகச் செய்யவும். அரசியல் தீர்வு காண்பதில் இன்று காலங்கள் வீணடிக்கப்படுகிறது.

சமஷ்டி ஆட்சி முறை, அதிக அதிகாரங்கள், வழங்கள், இணைப்பு - இணைப்பின்மை, சுயநிர்ணய உரிமை போன்றவைகள் எல்லாம் பிரச்சனைகளைத் தவிர்ப்பதற்காக உதவும் வார்த்தைகளே தவிர நடைமுறைக்கு உகந்தது அல்ல.

முரண்பாடுகளுக்குள் நுழைய நான் விரும்பவில்லை. இந்த பிரச்சனைக்குரிய அனைத்துக் கேள்விகளுக்கும் என்னிடம் பதில் இல்லை. இப்போது நாம் முகம் கொடுக்க வேண்டி நேரம் வந்து விட்டது என்று உண்மையாக உணருகிறேன். இப்போது நாம் முகம் கொடுக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. இதுதொடர்பாகத் தமிழர்களின் கருத்தை அறிவோம். ஒரு நாள் புலிகளுடன் குலாவிவிட்டு மறுநாள் அரசைக் கண்டிப்பதை விடுத்து எதிர்க்கட்சிகள் எழுந்து நிற்கட்டும்.

இறுதியாக இதனைத்தான் செய்து முடிக்க வேண்டுமானால் செய்து முடிக்கவும்.

நாம் இனி தவறுகள் செய்யக்கூடாது. புலிகள் நிலத்துக்காக சண்டை போடுகிறார்கள். ஆனால் குடியேற்றத்துக்கு எதிராக பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படுகிறது. ஏனெனில் குடியேற்றங்கள் ஈழத்துக்கான அடிப்படையை அழித்துவிடும்.

மிக உன்னதமான தீர்வுக்கு என்னால் உதவ முடியாது. ஆனால் மாஓசே துங் சொன்னதை குறிப்பிடுகிறேன். ''உன் எதிரி எதிர்ப்பதை ஆதரிக்கவும், உன் எதிரி ஆதரிப்பதை எதிர்க்கவும்,'' புலிகள் எங்கள் எதிரி, தமிழர்களின் இலட்சியம் ஈழம். ஈழத்துக்கான அடிப்படையை ஒழிக்கவும். இதனைவிட வேறு வழி உள்ளதா?

**எம.எச.குணரட்னே**

## உண்மை நிலவரம்

மேற்கூறிய குடியேற்றங்கள் இரகசியமாக மேற்கொண்டதாக குணரட்னே விபரித்துள்ளார். அமைச்சர் காமினி திசநாயக்க தலைமையில் நடந்த இந்த நில அபகரிப்பு உலக வங்கி அபிவிருத்திக்கென கொடுத்த நிதியில் நடைபெற்றதால் உலகத்திற்கு இரகசியமாக இது மேற்கொள்ளப்பட்டதே தவிர அரசுக்கு தெரியாமல் நடைபெறவில்லை என்பதே உண்மையான நிலமையாகும். மக்கள் பணத்தில் இரகசியமாகத் தமிழர் நிலங்களை அபகரிப்பதைத் தமிழர் சர்வதேச ரீதியாக அம்பலப்படுத்திப் பிரச்சாரம் செய்ததின் விளைவாக இவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது போல் சிங்கள அரசு நாடகமாடியது.

குணரட்னே தனது குறிப்பில் குறிப்பிட்டதுபோல் அரசு குடியேற்றங்களை வெளியேற்றவில்லை. மாறாக பயங்கரவாதிகளினால் ஆபத்து நேரிடும் என்று காரணம் காட்டி இந்த குடியேற்றப் பகுதிகளில் இராணுவ முகாம்களை நிறுவியது. மேலும் ஆயுதபாணிகளாக்கப்பட்ட இந்தச்

7 ஆம் பக்கம் பார்க்க



படிப்பகம்

www.padippakam.com



# உன் அடிச் சுவட்டில் நானும்



ஒரு முறை காவல்காரன் ஒருவன் மோட்டார் சைக்கிளில் வேகமாகச் செல்வதைப் பார்த்து, "ஏய்! ட்ராய் மாமா சைக்கிளை நீ ஏன் எடுத்து ஓட்டுகிறாய்? திரும்பக் கொடுத்துவிடு. இல்லையென்றால் மாமாவிடம் சொல்லி விடுவேன்" என்று கூச்சல் போட்டான்.

அவனுடைய கபடமற்ற தன்மை எங்களைச் சிரிக்க வைத்துவிட்டது. ஒரு வேளை ட்ராய் என்ற பெயரில் அவனுக்கு ஒரு மாமா இருக்கலாம். ஒரு முறை என் பெயரைச் சொல்லி, என்னைப் பார்க்க வேண்டும் என்று கேட்டான். 4ம் எண் செல்லுக்கு போகச் சொல்லவே நேராக என்னிடம் வந்தான் "குயென் அத்தை" என்று என் பெயரைச் சொல்லி அழைத்தான். அவனுக்கு என் பெயர் தெரிந்தது குறித்து ஆச்சிரியப்பட்டேன். ஆகவே அவனிடம்,

"தம்பி, உனக்கு என்ன வேண்டும்? நான்தான் குயென் அத்தை" என்றேன். அவன் கையிலிருந்த ஆரஞ்சுப்பழத்தை நீட்டி இந்த ஆரஞ்சு பழத்தை உங்களிடம் கொண்டுபோகும்படி மாமாக்கள் சொன்னார்கள். நீங்கள் நன்றாக இருக்கிறீர்களா என்று கேட்டார்கள் என்று தெளிவாகச் சொன்னான். நான் சிறைக் கதவின் வழியாகக் கையை நீட்டி அவனது பிஞ்சுக் கையைப் பற்றிக் கொண்டேன். அவனுக்கு அந்தப் பச்சைப் பழத்தை உறித்து ஊட்ட விரும்பினேன். ஆனால் அவனோ தலையை அசைத்து வாங்க மறுத்துவிட்டான்.

"அந்த மாமாமார் எனக்கு நிறையக் கொடுத்தார்கள்." இன்னும் அந்தப் பிஞ்சுக் கையை மடக்கிக் கொணடிருந்தான்.

"உன் பெயர் என்னப்பா?"

"டான்"

.ரொம்ப நல்லது. டான், மாமாமாரிடம் போய் குயென் அத்தை நன்றாக இருக்கிறாள், ரொம்பவும் நன்றி சொன்னார்கள், என்று சொல்கிறாயா?"

"ஆகட்டும் அத்தே!" என்று தெளிவான, உரத்த குரலில் கூறிவிட்டு ஆண்கள் பகுதிக்கு ஓடினான். அவன் மிக துடிப்பான,சுறுசுறுப்பான சிறுவன். மிக விரைவிலேயே காம்பவுண்டிற்குள் இருந்த வழிகள் அனைத்தையும தெரிந்து வைத்துக் கொண்டான். காவலாளிகளைப் பார்க்கும்போது மறைந்துகொள்வதும், கைகளைப் பின்னுக்கு கட்டிக்கொண்டு பொருட்களை மறைத்துக் கொள்வதும், சித்திரவதையினால் நொந்துபோயிருக்கும் கைதிகளுக்குச் சாப்பாடு எடுத்துக் கொண்டுபோய் கொடுப்பதுமாக ஓடிக்கொண்டிருந்தான். சமீபத்தில் கொண்டுவரப்பட்ட லாய்க்கு அடிக்கடி சிகரெட் கொண்டுபோய்க் கொடுப்பான். சில கெஜ தூரத்தில் தான் லாய் அடைக்கப்பட்டிருந்தான். ஒரு சமயம் எடுபிடி வேலைகளுக்காக வெளியே அனுப்பப்பட்டிருந்த போது ஒருவர் டானின் கையைப் பிடித்துக் கொண்டு அங்கு வந்தார்.

அவர் என்னிடம் "என்ன இது? உன்னுடைய மருமகனை உன்க்குத் தெரியவில்லையா? இந்தச் சிறுவன் டானுக்கு உன் கணவனை நன்றாகத் தெரியுமே. அடிக்கடி அவரை விசாரித்துக்கொள்வான், ட்ராயுடைய நடவடிக்கையில் சம்பந்தப்பட்டிருப்பார்கள் என்று சந்தேகப்பட்டு இவனுடைய பாட்டியையும் இவனையும் இங்கே கொண்டுவந்து தள்ளியிருக்கிறார்கள்" என்றார். பிறகு சிறுவனிடம் திரும்பி "இவர்கள் தான் குயென் அத்தை! எங்கே காலை வணக்கம் சொல்லு!" என்றார்.

அந்தச் சிறுவனும் மரியாதை தெரிவிக்கும் வகையில் கைகளை குவித்து நெஞ்சிற்கு நேராக வைத்துக்கொண்டு அமைதியாக, "காலை வணக்கம் அத்தை" என்றான்.

அவனை என் இரு கைகளாலும் அணைத்துக்கொண்டு, "உனக்கு ட்ராய் மாமாவைத் தெரியுமா? உண்மையாகவே உனக்குத் தெரியுமா?" என்றேன்.

அவன் ஆமாம் என்பதைக் காட்ட தலையை அசைத்தான். "ஆமாம், எனக்கு அடிக்கடி பழம் வாங்கிக் கொண்டு வருவார். அவருடைய மோட்டார் சைக்கிளில் என்னுடைய வீட்டிற்கு வருவார்." என்றான்.

"இப்பொழுது ட்ராய் மாமா எங்கே இருக்கிறார் என்பது தெரியுமா?"

"அவரை ஜெயிலுக்கு அனுப்பி விட்டார்கள்" என்றான். எனக்கு அழுகை பீறிட்டுக் கிளம்பியது. டானை நெஞ்சில் ஆழமாக புதைத்து அணைத்துக்கொண்டேன. எங்களை அறியாதவர்கள், நிச்சயமாக நீண்ட நாட்கள் பிரிந்திருந்த தாயும் மகனும் என்றே நினைப்பார்கள். அந்தக் குழந்தை ட்ராயை நன்றாக நினைவில் வைத்துக் கொண்டிருந்தது. அவர் மீது ஆழமான அன்பு வைத்திருந்தான் என்பது தெளிவு. ஜெயில் வார்டர் உணமையிலேயே என் கணவரின் மோட்டார் சைக்கிளைத்தான் ஓட்டிக்கொண்டிருக்கிறார் என்று நினைத்து, அதனைத் திரும்பக் கொடுத்துவிடும்படியும் கேட்டிருக்கிறான். கொஞ்ச நேரம் கழித்து வந்த மற்றொரு 'கைதி', ட்ராய் இந்தச் சிறுவர்மீது மிகுந்த பாசம் வைத்திருந்தார்" என்று கூறினார். டான் ஆறுமாதக் குழந்தையாய் இருக்கும்போது, அவனுடைய தாய் பொம்மை அரசாங்கத்தின் கொடியை வணங்காமலும், 'கம்யூனிஸ்ட் எதிர்ப்புக்கு ஒப்புக்கொள்ளாமலும் இருந்ததற்காகக் கைது செய்யப்பட்டு அடித்தே கொல்லப்பட்டிருக்கிறார். அவனுடைய தகப்பனார் தான் வாழ்வதற்கே கடுமையாக உழைக்க வேண்டியிருந்ததால், இவனைக் கவனித்துக்கொள்ள நேரமில்லாமல் போய்விட்டது. ட்ராய் இந்தச் சிறுவனுக்காக மிகவும் வருத்தமடைந்திருக்கிறார். அடிக்கடி அவனை பார்க்கச் செல்வதும், பழங்கள் வாங்கித்தருவதும், குளிப்பாட்டி விட்டு வருவதும் உண்டாம். டான் அவனுடைய அப்பாவைக் காட்டிலும் ட்ராயைத்தான் அதிகம் நினைப்பான் என்று அவனுடைய பாட்டி அடிக்கடி கூறுவாள்.

இந்தச் சிறுவனைக் கவனித்துக் கொள்வதில் என்னுடைய கணவருடைய இடத்தை நான் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று எண்ணினேன். சிறையில் இருந்த அந்த நாட்களில் என்னுடைய கவலையை ரொம்பவும் குறைக்க உதவியாக இருந்தது. அவன்தான் மணிக் கணக்காக என்னோடு பேசிக் கொண்டே இருப்பான். ஆயிரக்கணக்கான கேள்விகளாகக் கேட்பான். சில சமயங்களில் என்னிடம் கோபித்துக்கொண்டு "அப்படியானால் ட்ராய் மாமாவிடம் சொல்லி விடுவேன்" என்பான். ஒவ்வொரு சமயமும் பழங்களும், இனிப்பும் கொடுப்பேன். அப்படிக் கொடுக்கும் போதெல்லாம் "இது மாமாவிடமிருந்து அவருடைய குட்டிடானுக்கு வந்த பரிசு" என்று கூறுவேன். அதை வாங்கிக் கொண்டு மகிழ்ச்சி பொங்க "அப்படியா? மாமா எப்பொழுது வருவார்?" என்பான். சில மாலை நேரங்களில் டான் அவனுடைய பாட்டியின் செல்லிலிருந்து பேசுவான். "குயென் அத்தை ட்ராய் மாமா இல்லாமல் இருக்கிறாயா? என்பான். என்னுடைய தோழிகள் எல்லோரும் 'கொல்' லென்று சிரித்து விட்டார்கள். 'ஏ' சின்னப்பயலே, பேசாமல் தூங்கப் போ" என்பார்கள்.

நாள் முழுக்க டானின் பேச்சிலேயே மயங்கி, காலம் கழிந்து கொண்டிருந்து. சிறைத் தோழிகள் இவனுடைய பேச்சிலே மயங்கி, ஏக்கத் தோடு "டானைப்போல ஒரு மகன் இருந்திருந்தால், ட்ராய் எவ்வளவு அன்போடு நேசிப்பார்" என்பார்கள். இவர்களுடைய பேச்சு என் கணவர் ஒரு சமயம் இது பற்றிச் சொல்லியதை நினைவூட்டியது. அவருக்கு ஒரு மகன் வேண்டுமென்று ஆவலோடு இருந்தார் என்பது நினைவுக்கு வந்தது. "மகள் வேண்டாமென்று அர்த்தமில்லை— ஏனோ நம்முடைய முதல் குழந்தை ஆண் குழந்தையாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன்."

அதிகமாகச் செய்வதை விட செய்வதை திருத்தமாகச் செய்வதே மேல்

படிப்பகம்

www.padippakam.com



"என்னுடைய கணவரைப் பார்க்க வேண்டும் என்று ஆவல் கட்டு மீறியது. அடுத்தமுறை அவரைப் பார்க்கப் போகும்போது டானை யும் அழைத்துக்கொண்டு செல்ல வேண்டும். அது அவருக்கு மகிழ்ச்சி யூட்டும்.

அன்று மாலை சகோதரி குயென் சொல்லி வந்த வரலாற்றில் கவனம் செலுத்த முடியாதிருந்தார். அடிக்கடி கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தார். சற்று பக்கத்து அறையிலிருந்து ஒரு பெண்ணின் குரல்கேட்டது. "குயென், நேரம் ஆகி விட்டது" என்று குரல் வந்தது.

இன்று மாலை 8.30 மணிக்கு ரேடியோ ஹனாயிலிருந்து ஒலி பரப்புச் செய்தியொன்று கீழ்க்கண்ட வாறு கூறியது: இப்பொழுது வட வியத்நாம் முழுவதும் திரையிடப் பட்டு வரும் 'நகூயென் வான் ட்ராய் என்றும் வாழ்கிறார்' என்ற திரைப் படத்தின் முழு ஒலிச்சித்திரம் ஒலி பரப்பப்படும் என்பதுதான் அறிவிப்பு.

ஒலிபரப்புத் தொடங்கிய முதல் வினாடியிலிருந்து ட்ராய்க்குப் பின்னாலேயே நடந்து தூக்கு மேடைக்களத்தை நோக்கிச் செல்வ தைப் போலவே அனைவருக்கும் உணர்வு தட்டியது. வானொலி வர்ண னையாளரின் குரல் உணர்ச்சி வசப் படும். சில சமயங்களில வெறுப்பு ணர்வோடு சீறிப்பாய்வார். ஒவ்வொரு காட்சியாகக் கடந்துகொண்டு போய்க்கொண்டிருந்தது. பத்திரிகை யாளரிடம் ட்ராய் பேசினார், பசுமை யான செடிகளிடம் நிற்கிறார், தன் கண்கட்டை திடீரென்று கிழித் தெறிகிறார்.

டிரான்சிஸ்டர் ரேடியோவை கையில் அணைத்துப் பிடித்துக் கொண்டு குயென் ஒவ்வொரு வார்த்தையையும் கவனமாகக் கேட்டுக்கொண்டு வந்தார். ஒவ்வொரு சொல்லும் வானொலி மூலம் கேட்கும்போது அவருடைய கண்களிலிருந்து நீர் பொங்கிப் பொங்கி வடிந்தது. நேரத்திற்கு நேரம் பெண் பிரதிநிதிகளிடமிருந்து பெரு மூச்சும், அழுகைக்குரலும் வெடித்து வந்துகொண்டிருந்தது.

காட்சி மாறுகிறது. இரவு பகலாக சைகோன் நகரில் கிளர்ந்தெழுகி றார்கள் மக்கள். தீவட்டிகள் தெரு வெல்லாம் காட்சி தருகிறது. ஹனாய் நகர மின்சார உற்பத்தி நிலையத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் ட்ராய் கவுரவத் தொழிலாளியாகப் பிர கடனப்படுத்துகிறார். இரும்பு எஃகு ஆலை யொன்றில் எவ்வளவு உயரத்தில் வைக்க முடியுமோ அவ்வளவு உயரத்தில் ட்ராயின் மிகப் பெரிய உருவப்படத்தை - மாட்டு கிறார்கள. பள்ளிகளின் வகுப்பறை யில் அவருடைய நினைவுகள் எதிரொலிக்கின்றன...

"வியத்நாமில் இன்னும் வாழ்கி றார் ட்ராய், எங்கும் அவருடைய உருவப்படங்கள்- மலை முகடுகளி லிருந்து தீவுகள் வரை, கட்டாந்த ரையிலிருந்து கடற்கரை வரை எங்கும் அவரது உருவங்களே காட்சி தருகின்றன."

கப்பலின் தளத்தில் மோதும் கடல் அலை ஓசையோடு, வர்ணனை யாளரின் குரலும் வானொலியில் வருகிறது...எங்களையும் அங்கு கொண்டுசெல்கிறது...தென்வியத்நா மில் விடுதலை செய்யப்பட்ட பகு தியில் சின்னஞ் சிறு வீடொன்றில் வாழும் பதுப் பனிரெண்டு பேர் இந்த ஒலிப்பரப்பைக் கூர்மையாகக் காது கொடுத்துக் கேட்டுக்கொண்டி ருக்கிறார்கள்-அவர்களும் ட்ராயுடன் தாயாகத்தைக் காக்கும் வகையில் கடற்கரை ஓரமாக ரோந்து சுற்றும் படகில் பயணம் போய்க்கொண்டி ருக்கிறார்கள் இரவு பகலாக!

எங்களைச் சுற்றிலும் மாநாட்டிற்கு என ஒதுக்கப்பட்டுள்ள முகாம் முழு வதிலுமிருந்து வெளிவந்து கொண்டி ருந்த வானொலியில் கம்மிய குர லில், உணர்வு பீறிட, கவிஞர் தோஹியூ தனது "என் சொற்களை நினைவிற் கொள்ளுங்கள்" என்ற கவிதையைக் கூறிக்கொண்டிருக்கி றார். அத்தோடு நிகழ்ச்சி வானொ லியில் முடிவடைகிறது.

வானொலி நிகழ்ச்சி முடிந்தும் முடியாமலே சைகோன் பிரதிநிதி களிடையே விவாதங்கள் தொடங்கி விட்டன. ஒவ்வொருவரும் ஏதாவது கூறினார்கள். "வடவியத்நாம் மக்கள் தங்கள் சொந்தப் பிள்ளைகளை விட அதிகமாகவே ட்ராயை நேசிக் கிறார்கள்"– உண்மையிலேயே ட்ராய் வடவியக்நாமிற்கு இப்பொழுது வருகை தந்திருக்கிறார் " வடவிய த்நாம் போர்ப்படையில் ட்ராய் சேர்ந்து விட்டார்" "அவர் கடற் படையில் இருக்கிறார்..."

ஒரு பேராசிரியை 'யூ' எனபவர் ட்ராயின் மரணம் குறித்து மேலும் சில விவரங்களைக் கூறினார்:

"வட் வியத்நாமில் ட்ராயினுடைய மரணத்தைப்பற்றி ஒரு சின்னப் படம் தான் இருக்கிறது என்று நினைக்கிறேன். ட்ராயின் மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட போதே என்னுடைய மாண வனுடைய சகோதரன்- ஒரு பத்திரிகை நிருபர் – அங்கிருந்தி ருக்கிறார். ஆகையால் அந்த மாண வனுக்குச் சில விஷயங்களைச் சொல்லியிருக்கிறார். சில பத்திரிகை நிருபர்கள் ட்ராயை நிறையப்படம் பிடித்து விட்டார்கள் என்றும், குறிப்பாக அவர்களது கேள்விக ளுக்கு ட்ராய் பதில் சொல்லும் போது படம் பிடித்திருக்கிறார்கள். மரண தண்டனையை நிறை வேற்றும் துப்பாக்கிப் படையைக் கண்டவுடன் ட்ராய் நிலைகுலைந்து விழுந்துவிடுவார் என்றும், தனது குற்றங்களை மனம் திறந்து ஒப்பு க்கொண்டு எல்லா ரகசியங்களையும் சொல்லிவிடுவார் என்ற நப்பாசையில் அமெரிக்க - கான் கூட்டுக் கும்பல் வெளிநாடுகளிலி ருந்தெல்லாம் பத்திரிகையாளர்க ளைக் கொண்டு வந்திருந்தார்கள். கூலிக்கு மாரடிக்கும் சில கூலிப் பத்திரிகையாளர்களும், ரகசிய உள வாளிகளும் ஆத்திரமூட்டும் கேள்வி களைக் கேட்கவேண்டும் என்று தயாராக விருந்தனர். ஆனால் பாழ டைந்த ஒதுக்கப்பட்ட தனிமைச் சிறையிலிருந்து ட்ராய் வெளியே வருவதைப் பார்த்த மாத்திரத்தி லேயே இவனை யாரும் அசைக்க முடியாது என்பதை அறிந்து கொண்டார்கள். பத்திரிகையாளர்க ளைப் பார்த்து மெள்ளப் புன்னகை செய்தார். அங்கே கூடியிருந்தவர் களுக்கும் சிலர் மரண தண்டனை நிறைவேறப் போவதை எண்ணி கதிகலங்கிப் போயிருக்கிறார்கள். ஆனால் ட்ராய் மட்டும் மகிழ்ச்சி ததும்பும் முகத்துடன் சிரித்த வண்ணம் இருந்தார். பத்திரிகை யாளர் கேட்ட எல்லா கேள்விக ளுக்கும் பதில் சொன்னார். எனக்கு அந்த மாணவர் தனது சகோதரர் கூறியதை அப்படியே கூறினான், ட்ராய் அப்பொழுது பத்திரிகையா ளர்களிடம் "நீங்கள் அனைவரும் பத்திரிகையாளர்கள், ஆகையால் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரி யும்.

தொடரும்....

5 ஆம் பக்கத் தொடர்ச்சி

சிங்களக் குடியேற்றவாசிகள் அண்டையில் உள்ள தமிழ் கிராமங்களில் அடிக்கடி தாக்கு தல் நடாத்தித் தமிழர் சொத்துக்களையும் சூறையாடி வருகின்றனர்.மேலும் இப்பகு திகளில்தான் கைதிகளை சீர்திருத்துவதாகக் கூறி அனுராதபுர சிறைச்சாலைகளில் அடைத்து வைக்கப்பட்டிருந்த பயங்கரக் குற்றவாளிகளை குடியமர்த்தி உள்ளனர். இந்த சிங்களக் குற்றவாளிகளின் கொடுமை களைத் தாங்க முடியாமல் அண்டைய தமிழ்க் கிராமங்களில் இருந்த அப்பாவி மக் கள்வெளியேறி விட்டனர். இன்றுவரைதங் களின் சொந்த வீட்டுக்குத் திரும்ப முடியா மல் உள்ளனர்.

புலிகளை ஆதரித்து பேசி வரும் அமைச்சர் தொண்டைமான்தான், ஈழத்தை அழிக்க கங்கணம் கட்டிச்செயல்பட்ட குண ரட்னேக்கு ஆதரவாக அன்று செயல்பட்ட தோடு அவர் மீது அரசு நடவடிக்கை எடுக் கப் போவதாகக் கூறியபோது அவரைக் காப்பாற்ற பல முயற்சிகளை மேற்கொண் டார்.

இந்த கபடதாரிகளைப் புலிகளும் புரிந்து கொண்டிருப்பார்கள் என்று நம்புகி றோம்.

ஜெயவர்த்தனாவின் மகன் ரவி ஜெய வர்த்தனா தலைமையில் பச்சைப்புலிகள் என்று இராணுவப் படைப்பிரிவு ஒன்று இயங்கியது. மட்டக்களப்பு அம்பாரை மாவட்டத்தில் தமிழருக்கு எதிராக நடந்த அனர்த்தனங்களுக்கு இந்த பச்சைப் புலி களே காரணமாக இருந்தது.

சிங்கள ஆட்சியாளரும் நிழல் அமைப் புகளும் தமிழ் இனத்துக்கு எதிராக எப்படி எல்லாம் செயல்பட்டனர் என்பதனை சம் பந்தப்பட்ட அரசு ஊழியரே எழுத்து மூலம் தனது திட்டத்தினை வெளியிட்டுள்ளார். இவர் 1983ல் தான் இந்தத் திட்டங்களை ஆரம்பித்தார். ஆனால் இவரை விட டீ.எஸ்.சேனா நாயக்கா காலத்தில் அதா வது சுதந்திரம் பெற்ற ஆண்டே தமிழ் மக்க ளைத் துண்டு போட்டு அழித்துவிடும் திட் டத்தினை வகுத்துச் செயல்படுத்தினர்.

எம்.எச்.குணரட்னே எழுதியுள்ள இந் தக் கட்டுரையில் தமிழர்களை புலிகள் குடி யேற்றம் செய்தனர் என்று உள்ளது. புலிக ளுக்கும் தமிழ் குடியேற்றங்களுக்கும் எந்தச்



சம்பந்தமும் கிடையாது. தமிழ்க் குடியேற் றங்களைச் செய்தது டேவிட் ஐயா தலை மையில் இயங்கிய ''காந்தியம்'' அமைப் புத்தான். தமிழர் பிரதேசத்தைப் பாதுகாக்க வவுனியா, திருகோணமலை, மட்டக்க ளப்பு, மன்னார், முல்லைத்தீவு மற்றும் கிளி நொச்சி மாவட்டங்களில் காந்தியம் தமிழ் மக்களைக் குடியமர்த்தியது. அரசின் எதிர்ப் புக்கிடையில் எங்கள் மண்ணைப் பாதுகாக் கும் பணியில் ஈ.என்.டி.எல்.எப் பொதுச் செயலாளர் ஞானசேகரன் அவர்களும், உமா மகேஸ்வரனால் கொலை செய்யப் பட்ட சந்ததியார் அவர்களும் முன்னின்று குடியேற்றப் பணிகளை மேற்கொண்டனர். வேறு எந்த இயக்கத்தினரும் சிங்களவரின் சதித் திட்டத்தை முறியடிக்க இதுபோன்ற பணிகளை மேற்கொண்டதில்லை. 1983ம் ஆண்டு காந்திய இயக்கத்தை ஜெயவர்த்தன அரசு தடை செய்து தலைவர்களை சிறை யில் அடைத்தது.

## ஜெர்மனியில் இலக்கியச் சந்திப்பு

புலம் பெயர்ந்தோர் நடாத்துகின்ற 21வது இலக்கிய மாநாடு வரும் 'மே' மாதம் 17, 18ந் திகதிகளில் ஜெர்மன் பேர்லின் நகரில் நடைபெறவிருக்கிறது. பல நாடுகளிலி ருந்து பிரதிநிதிகள்கலந்து கொள்ளும் இந்நி கழ்ச்சியில் ஆய்வரங்கம், கருத்தரங்கம், கலையரங்கம், இலக்கிய அரங்கம் மற்றும் ஈழத்தின் அரசியல் பற்றிய விவாதங்கள் என்பன இடம் பெறவுள்ளன. புதிய நூல்க ளும் வெளியிடவிருக்கும் இந்த அரங்கில் முக்கிய விருந்தினராக வங்க தேசத்துப் பெண் எழுத்தாளரும், இஸ்லாத்தின் பெண் ணடிமையை எதிர்த்து எழுதியவருமான தஸ்லிமா நஸ்ரீன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றவிருப்பது நிகழ்ச் சியின் முக்கிய அம்சமாகும் திரு.ந.சுசீந்தி ரன் அமைப்புக் குழுவின் முக்கிய பங்கை ஏற்றுச் செயல்படுகிறார்.

## கூத்தர் சிரிக்கிறார்

### இன வியாபாரிகள்

பொடியளுக்கு உதவும் நோக்கத்துடன் எம்.ஜி.ஆர் அரசு ரூபா ஆயிரம் வீதம் கொடுத்துதுங்கோ. அப்போது தேவமான முதலைத் தலைவர் முகாமில் இருந்தவங்களை பிடித்துக் கொண்டு போய் வரிசையில் நிற்பாட்டி பொடியள் எண்டு கணக்குக் காட்டிப் போட்டு பொடியளுக்கு முன்நூறும் தன் பையில் எழுநூறும் போட்டுக் கொண்ட சங்கதி ஊர் அறிஞ்சதுதானுங்கோ. அந்த பிழைப்பை இன்னும் விடுறமாதிரி தெரியலைங்கோ. இப்ப அதி உன்னத அம்மையாருக்கு தலையை எண்ணி காட்டி போட்டு மூவாயிரம் வாங்குறாராம். வியாபாரத்தைப் பெருக்க தமிழகத்துக்கும் தரகர்களை அனுப்பி வைச்சாருங்கோ. அவரின் சங்கதி இங்கு வியாபாரமாகலைங்கோ. சனங்கள் கொடுத்ததை வாங்க முடியாமல் துண்டை காணோம் துணியை காணோம் என்று காணாமல் போயிட்டினம்.





படிப்பகம்

www.padippakam.com



# கேளுங்கள்



**கேள்வி:** இந்திய அரசு உங்களை வெளியேற்றினால் உங்கள் நிலை என்ன. சிங்கள அரசுடன் சேர்ந்து விடுவீர்களா அல்லது புலிகள் உங்களது ஆதரவு கோரினால் உதவுவீர்களா?

ரமேஷ்
சென்னை-24.

**பதில்:** ஈழத் தமிழர்களின் நியாயமான பிரச்சனையை உலகளவில் கொண்டு செல்ல இந்தியா உதவியது. 1983லிருந்து இன்று வரை ஈழத் தமிழ் அகதிகளை இந்திய மண்ணில் வைத்து பராமரித்து வருகிறது இந்தியா. சிங்கள அரசால் கொடுமைகளுக்குள்ளாகும் ஈழத் தமிழர்கள் மீது இந்தியாவுக்கு எப்போதும் அனுதாபம் உண்டு. அதனால் அவர்களின் பிரச்சனைக்குத் தீர்வு காண பல வழிகளில் உதவி புரிகிறது. இந்தியாவின் தேசிய தலைவர் ராஜீவ் காந்தி புலிகளால் படுகொலை செய்யப்பட்ட போதும்கூட புலிகளைத் தடை செய்து அவர்கள் மீது நடவடிக்கை எடுத்ததே தவிர ஈழத் தமிழரை முற்றாக அடித்து விரட்டி விடவில்லை. அப்போதிருந்த மாநில அரசும் இந்தியாவின் நட்பு ஈழ அமைப்புக்களை சிறப்பு முகாம் என்னும் சிறையில் அடைத்ததே தவிர அவர்களை வெளியேற்றவில்லை. இந்தியா எங்களை வெளியேற்ற எந்த காரணமும் இருந்ததில்லை ஈழ மக்களை வெளியேற்ற மாட்டார்கள் என்ற நம்பிக்கையும் எமக்கு உண்டு. அரசியல் சூழலின் மாற்றம் காரணமாக எம்மை வெளியேற்றும் நிலை இந்தியாவுக்கு உருவானால், அப்போது சூழலுக்கு ஏற்ப எமது தளத்தை வேறு ஒரு நாட்டுக்கு மாற்றி எமது போராட்டத்தை தொடர்ந்து நடத்துவோம்.

தமிழர்களின் சுயநிர்ணய உரிமைகளை ஏற்காத வரையில் சிங்கள அரசுடன் இணைவது என்பது ஈழத் தமிழர்களுக்கு இழைக்கப்படும் துரோகமாகும். தவிர்க்க முடியாத நிர்பந்தத்துக்கு உள்ளாக நேரிடும்பட்சத்தில் ஒதுங்கி இருந்தாலும் இருப்போமே தவிர எம்மை காப்பாற்றிக் கொள்ள சிங்கள அரசுகளுடன் இணைய மாட்டோம். எங்களது இயக்கம் ஒன்றினைத் தவிர அனைத்து இயக்கங்களும் சிங்கள அரசிடம் கையேந்தியவர்கள்தான்.

புலிகள் ஒரு நல்ல சக்தியாக இருக்குமானால் அவர்கள் கோராமலே நாம் இணைந்து செயல்பட்டிருப்போம். நாம் கொண்ட இலட்சியத்திற்கு இணையானது தான் புலிகள் இலட்சியமும், ஆனால் இலட்சியத்தை அடையக் கடைபிடிக்கும் கொள்கையில் தான் நாம் முரண்படுகிறோம். புலிகள் சர்வாதிகார கொள்கையுடையவர்கள் நாம் ஜனநாயகத்தில் நம்பிக்கை உடையவர்கள். இதுபோன்ற பாரிய வேறுபாடுகள் எங்களுக்கும் புலிகளுக்கும் உண்டு. மற்றும் புலிகளின் பாசிச தன்மையை கடுமையாக எதிர்க்கின்றோம். இந்த மனித விரோத கொள்கையை புலிகள் கைவிடும் வரை உறவு என்ற பேச்சுக்கே இடமில்லை. புலிகளின் போராட்ட சக்தியையும் தியாகத்தையும் நாம் கொச்சைப்படுத்தவில்லை. தலைமையின் தவறான வழி நடத்துதலினால் இவர்களின் தியாகம் விழலுக்கு இறைத்த நீராகிறது. புலிகளும் ஏனைய சகோதர அமைப்புக்களின் தியாகங்களுக்கு மதிப்பளித்திருந்தால் ஈழத் தமிழர்களின் இலட்சியம் என்றோ ஈடேறியிருக்கும்.

யாருக்கு யார் ஆதரவு என்ற நிலையை நாம் ஆதரிக்கவில்லை. எந்த நல்சக்தியுடனும் இணைந்து போராட நாம் எப்போதும் தயாராக உள்ளோம்.

**கேள்வி:** இந்திய இலங்கை ஒப்பந்தத்தை புலிகள் எதிர்த்தபோது தமிழீழக் கொள்கை கொண்டதாகக் கூறும் E.N.D.L.F. அதனை ஆதரித்தது ஏன்?

கு.சிவராசன்
கமுதாவளை,
மட்டக்களப்பு

**பதில்:** 1987 ஜூலை 29ல் இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தானபோது அது தொடர்பாக ஈ.என்.டி.எல்.எப். (ENDLF) தன் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தி இருந்தது. ஆதரவு தெரிவிப்பதற்கான காரணத்தையும் விளக்கியிருந்தது. இந்த ஒப்பந்தத்தை சிங்கள அரசு நடைமுறைப்படுத்தாமல் காலப்போக்கில் உதாசீனப்படுத்தும் என்றும் அப்போதே இந்தியாவுக்கு தெரிவித்திருந்தோம். ஒப்பந்தம் தோல்வி கண்ட பின்பு நாம் என்ன நிலைப்பாட்டை எடுப்போம் என்றும் தெளிவுபடுத்தியிருந்தோம். எங்களின் அன்றைய கணிப்புத் தவறவில்லை. இதனை விவரிப்பதற்கு முன்பு இன்னொரு விடயத்தையும் தெளிவுபடுத்த விரும்புகிறோம்.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்டபோது அனைத்து இயக்கங்களின் நிலைப்பாட்டையே புலிகளும் கொண்டிருந்தனர். ஒப்பந்தத்தில் ஈழத் தமிழர்களுக்கு ஏற்புடையதாக இல்லாத சில அம்சங்கள் சுட்டிகாட்டப்பட்டது. அதனை நிவர்த்தி செய்து தருவதாக அப்போதைய பாரதப் பிரதமர் அமரர் ராஜீவ் காந்தி உத்தரவாதம் அளித்திருந்தார். மேலும் அனைத்து இயக்கத் தலைவர்களும் டெல்லிக்கு அழைக்கப்பட்டு ஒப்பந்தம் ஏற்படுத்தப் போவதாக தெரிவிக்கப்பட்டது. ஆனால் ஒப்பந்தத்தை ஆய்வு செய்ய போதிய அவகாசம் வழங்கப்படவில்லை.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை இந்தியா அளித்த நம்பிக்கையின் பேரில் அனைத்து இயக்கங்களைப் போல் புலிகளும் ஏற்றுக் கொண்டனர். ஆயுதங்களை ஒப்படைத்து ஒப்பந்தத்துக்கு ஆதரவாகப் பேசியும், இந்திய சமாதானப்படை இலங்கையில் வந்து இறங்கியபோது புலிகள் மாலையிட்டு வரவேற்றது. தமது இயக்க உறுப்பினர்களின் புனர்வாழ்வுக்கென முதற்கட்ட பணமாக ரூபாய் ஐம்பது இலட்சத்தை (50,00,000) பிரபாகரன் பெற்றுக் கொண்டார். வேறு எந்த இயக்கத்துக்கும் இத்தகைய பணம் இந்தியாவால் வழங்கப்படவில்லை.

மூன்று வருடத்துக்கு வடக்கு - கிழக்கு மாகாண சபை ஆட்சியை தங்களிடம் ஒப்படைக்கும்படி புலிகள் கேட்டிருந்தனர். இதற்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டு ஜனநாயக ரீதியான தேர்தல் நடக்கும் வரை புலிகளிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைப்பது என்று முடிவு செய்யப்பட்டது. இடைக்கால நிர்வாக சபைக்கான உறுப்பினர்கள் பட்டியலைப் புலிகள் சமர்ப்பித்தனர். அந்த பட்டியலில் இருந்த சிவஞானத்தை தலைவராகக் கொண்டு இடைக்கால சபையை ஜே.ஆர். ஜெயவர்த்தனா அறிவித்தார். இதற்கு புலிகள் ஆட்சேபனை தெரிவித்து அவர்கள் சமர்ப்பித்த பட்டியலில் இருந்த இன்னொருவரான பத்மநாதனை நியமிக்கக் கோரினர். இதற்கு ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஆட்சேபம் தெரிவிக்க குழப்பம் ஆரம்பமானது.

பின் சிங்கள இராணுவம் குமரப்பா உட்பட ஒன்பது புலிகளைக் கைது செய்ததினாலும், அதனால் இந்த ஒன்பது புலிகளும் தற்கொலை செய்து கொண்டதாலும் ஒப்பந்தத்தை எதிர்க்கவும் இந்திய சமாதானப் படையைத் தாக்கவும் ஆரம்பித்தனர். குமரப்பாவின் திருமணத்திற்கு மணமகளை மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வர இந்திய சமாதானப் படையின் ஹெலிகாப்டர் பயன்படுத்தப்பட்டது. அந்தளவு நெருக்கமாகச் செயல்பட்டனர். ஆகவே ஆரம்பத்தில் ஒப்பந்தத்திற்கான ஆதரவை புலிகள் வழங்கினர். பின்னர் அவர்கள் விதித்த விதிகள் தொடர்பாக ஏற்பட்ட பிரச்சனையால் ஆதரவை விலக்கிக் கொண்டனர். இந்தியாவுடன் நேரடியாகப் பகைத்துக் கொள்ள முடியாத சிங்கள அரசு, ஒப்பந்தத்தை புலிகள் குழப்பும் வகையில் செயல்படத் துணைபுரிந்தனர்.

ஈ.என்.டி.எல்.எப். (ENDLF) கொஞ்சம் பொறுமையைக் கடைப்பிடித்து ஒப்பந்தத்தை அமுல் செய்ய முற்பட்டது. ஏனெனில் சிங்கள அரசு நிச்சயமாக இந்திய இலங்கை ஒப்பந்தத்தைக் குழப்பும். அதனூடாகச் சிங்கள அரசின் தமிழின அழிப்புத் திட்டத்தை உலகத்துக்கு அம்பலப்படுத்த நினைத்தது. இதன் மூலம் ஈழத் தமிழர்கள் போர் வெறியர்கள் அல்ல, அவர்களும் சமாதானத்தை நேசித்து அமைதியுடன் வாழ விரும்புபவர்கள்தான் என்பதனையும், அதே நேரத்தில் அடிப்படை உரிமையுடன் கூடிய அதிகாரத்தை விட்டுக் கொடுக்க மாட்டார்கள் என்பதனையும் நிரூபித்தோம். எங்களின் இந்த அணுகுமுறையால் தான் தமிழர்களின் போராட்டம் நியாயமானது என்று உலகை ஏற்றுக் கொள்ளச் செய்தது.

கடந்த காலங்களில் சிங்கள அரசுகளுக்கும் தமிழ் தலைவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தங்கள் யாவும் உடன்பட்ட சிங்கள அரசுகளாலே கிழித்தெறியப்பட்டது. அப்போது முதன்முதலாக இன்னொரு நாடு (இந்தியா) தமிழர்கள் சார்பாக சிங்கள அரசுடன் ஒப்பந்தம் செய்து கொண்டது. ஆரம்பத்திலிருந்தே ஈழத் தமிழர் பிரச்சனைக்கு தீர்வு காண அக்கறையுடன் இந்தியா பல உதவிகளைச் செய்து வந்துள்ளது. ஆகவே ஈழத் தமிழர்களின் போராட்டத்திற்கு இந்தியாவின் ஆதரவு இன்றியமையாதது. இந்தியாவின் நல்லெண்ண முயற்சியை இலங்கை அரசு மதிக்காது என்று எடுத்துரைத்தோம். ஆயினும் இந்தியா பிடிவாதமாக ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டது. இந்தியாவின் நல்லெண்ண முயற்சிகளுக்கு தமிழர்களால் இடையூறு ஏற்படக்கூடாது என்பதற்காகவும் அனுபவ ரீதியாக இந்தியா இலங்கையின் துரோகத்தனத்தைப் புரிந்து கொள்ள சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்பதற்காகவும் ஒப்பந்தத்தை ஆதரித்தோம். இந்த முயற்சியில் இந்தியா தோல்வி கண்ட பின் ஈழத் தமிழர்களின் போராட்டத்திற்கு ஆதரவு கிடைக்கும் என்று எதிர்பார்த்தோம்.



சிங்கள அரசும், புலிகளும் இந்தியாவுக்கு எதிராகச் செயல்பட்டன. அமரர் ராஜீவ் காந்தி ஏற்படுத்திய ஒப்பந்தம் என்பதனால் இந்தியக் கட்சிகளும் தங்கள் பங்குக்கு இந்திய அமைதிப் படையை வெளியேறும்படி கோரின. ஈழத் தமிழ் மக்களின் எதிர்காலம் பற்றி இவர்கள் கவலை கொள்ளவில்லை. இந்தியா போன்ற நாடு ஈழப் பிரச்சனையில் இனியொரு தடவை தலையிடுமா என்று கூட இவர்கள் சிந்திக்கவில்லை.

ஒப்பந்தம் கைச்சாத்தான அன்றே பாரதப் பிரதமருக்கு கொழும்பில் படைகள் அணி வகுப்பு மரியாதை கொடுத்த வேளையில் விமானப் படை வீரர் ஒருவரின் தாக்குதலில் இருந்து அமரர் ராஜீவ் காந்தி தப்பினார். இது ஒப்பந்தத்திற்கு கிடைத்த முதல் அடியாகும்.

இதன் மூலம் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக உலகத்தையே திருப்பி இருக்கலாம். ஆனால் புலிகள் இலங்கை அரசுடன் சேர்ந்து கொண்டதும், அமரர் இராஜீவ் காந்தியை படுகொலை செய்ததும் ஈழத் தமிழர் பக்கம் இருந்த நியாயங்களையும் அனுதாபங்களையும் மழுங்கடித்துவிட்டது. தமிழர்களுக்கு ஆதரவாக இருந்த இந்தியாவும் மௌனம் காத்து வருகிறது. அந்த மௌனம் இன்றுவரை தொடர்கிறது.

புலிகளும் தமிழீழம்தான் கோருகின்றனர். நாமும் தமிழீழம்தான் கோருகிறோம். ஆனால் புலிகள் கோரும் தமிழீழம் அவர்களுக்கும், அவர்களது ஆதரவாளர்களுக்கும் தான். நாம் கோரும் தமிழீழம் அனைத்து ஈழத்தமிழ் மக்களுக்காகவும் என்பதாகும். புலிகள் யார் யாரையெல்லாம் ஆதரிக்கின்றனரோ அவர்களையெல்லாம் நாம் ஆதரிக்க முடியாது. உதாரணத்திற்கு அவர்கள் பிரேமதாசாவை ஆதரித்தனர். அதனையே நாமும் செய்ய முடியுமா? அதேபோன்று தான் இந்தியாவை அவர்கள் விபரம் தெரியாமல் எதிர்த்தனர் அதனை நாம் செய்யவில்லை.

**கேள்வி:** இந்தியாவில் நீங்கள் எந்த கட்சியை சார்ந்துள்ளீர்கள். இந்தியாவில் உள்ள கட்சிகள் ஈழப் பிரச்னைக்கு என்ன செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?

சு.செல்வி
கே.கே.நகர்,
மதுரை.

**பதில்:** நாம் இந்தியாவின் எந்த குறிப்பிட்ட அரசியல் கட்சியையும் சாராதவர்கள். கட்சி சார்பின்மை கொள்கையையே கடந்த காலத்தில் கடைபிடித்து வந்தோம். தொடர்ந்தும் கடைப்பிடிப்போம். அதே நேரத்தில் அனைத்து கட்சிகளுடனும் நல்லுறவைப் பேணிப் பாதுகாப்போம். ஈழப் பிரச்சனைக்குத் தீர்வு காண அனைத்துக் கட்சிகளினது மட்டுமல்ல அனைத்து மக்களினது ஆதரவும் ஈழத் தமிழர்களுக்கு மிக அவசியமாகும். இந்தியாவில் சில கட்சிகள் ஒரு குறிப்பிட்ட அமைப்பை ஆதரித்து வருகின்றனர். அந்தந்த கட்சிகளின் முடிவை நாம் விமர்சனம் செய்ய முற்படவில்லை, மாறாக வேண்டுகோள் மட்டுமே விடுக்க விரும்புகிறோம்.

ஈழப் போராட்டம் பின்னடைந்ததற்கான காரணிகள் என்ன என்று ஆராய்ந்து பார்க்க வேண்டுகிறோம். ஈழத்துக்காக ஆதரவு நல்கி வந்த இந்திய மக்கள் இன்று பின்வாங்குவதற்கு யார் காரணம் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

1986ம் ஆண்டு வரை ஈழத்தில்

'இன்றைய சமுதாயம் எதிர்காலத் தலைமைத்துவத்தை ஏற்று நல்ல வழியில் இட்டுச் செல்ல பாடுபடுவோம்.

படிப்பகம்

www.padippakam.com



போராளி அமைப்புகள் மத்தியில் இருந்த கருத்து முரண்பாடுகள் எல்லாம் பேசித் தீர்க்கக்கூடிய நேச முரண்பாடாகவே இருந்தது. 1986ல் தான் சகோதர அமைப்பின் போராளிகளை அழிக்கும் பகை முரண்பாடாக மாறியது. தமிழகத்தின் தலைவர்கள் முயற்சி எடுத்திருந்தால் அன்று அந்த அழிவைத் தடுத்திருக்க முடியும். ஆனால் அந்தப் பாதகச் செயலை கண்டிக்கவோ, தடுக்கவோ முயற்சிக்கவில்லை. சில கட்சிகள் அந்த சகோதர அழிப்பை வீரமிக்க செயலாக வர்ணித்தது, இது மேலும் அழிவையே ஊக்குவித்தது. சில கட்சிகள் மௌனம் காத்தது. இந்த கொலைகள் தியாகமிக்க போராளிகளை மட்டும் அழிக்கவில்லை. ஈழப் போராட்டத்தைப் பல வருடங்களுக்குப் பின் தள்ளி இன்றைய அழிவுக்கு வழி வகுத்தது.

1987 இந்திய இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்டபோது அதனை கண்மூடித்தனமாக ஆதரிக்கவில்லை. ஈழப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு மக்களினதும் நாடுகளினதும் அங்கீகாரம் பெற வகை செய்தோம். தேர்தலில் பங்கு பற்றி மக்களின் அங்கீகாரம் பெற்றோம். தமிழர்களே தமிழர்களை ஆட்சி செய்ய முதன் முதலாகக் கிடைத்த மக்கள் அங்கீகாரத்தைப் பயன்படுத்தி நிர்வாகத்தை செப்பனிட்டு பேராட்டத்தை முனைப்புடன் முன் எடுத்துச் செல்லத் திட்டமிட்டோம். அனைத்து ஈழ அமைப்புகளும் ஒன்றிணைந்து 'தமிழ் தேசிய சபை' நிறுவி ஒரு குடையின் கீழ் செயல்பட்டோம். ஈரோசும் புலிகளும் எமது அழைப்பை நிராகரித்து இதில் இடம் பெற மறுத்து விட்டனர். தமிழகத்தின் சில தலைவர்கள் புலிகளுடன் நல்லுறவை வைத்திருந்தனர். ஒற்றுமைக்கு இவர்கள் புலிகளை வற்புறுத்தி இருந்திருந்தால் எமது போராட்டம் வெற்றி பெற்றிருக்கும்.

1987ல் எமது தலைமையகத்தை கிளிநொச்சியில் மீண்டும் அமைத்து செயல்பட்டு வந்த வேளையில் புலியின் பொறுப்பாளர்களில் ஒருவரான மாறனுடன் சந்தித்து பேசினோம். இணைந்து செயல்படுவது குறித்து பேச்சுவார்த்தை நடாத்தினோம். பேச்சுவார்த்தை நடந்து மூன்றாவது நாள் திடீரென புலிகளால் எம்முகாம் தாக்கப்பட்டது. அப்போது இந்திய சமாதானப் படையுடன் புலிகள் மோதலை ஆரம்பிக்காத நிலையில் இது நடந்தது. புலிகளின் மீது வெறுப்பு ஏற்பட்ட நிலையிலும், ஈழத்தின் நன்மை கருதி மோதலை தவிர்க்க பல முயற்சிகளை மேற்கொண்டோம்.

1989ம் ஆண்டு தமிழகத்தின் முதலமைச்சரை சந்தித்து புலிகளுடனான மோதலை தவிர்த்து ஒற்றுமை ஏற்படுத்த உதவும்படி கேட்டோம். அதற்காக மாகாண சபையில் புலிகளையும் இணைந்து செயல்பட உதவுமாறு கூறினோம். எமது முயற்சிக்கு எந்த ஆதரவும் பலனும் கிடைக்கவில்லை. இன்னும் ஈழத்தை ஆதரிப்பதாக கூறும் கட்சிகள் அன்றும் குறிப்பிட்ட ஒரு அமைப்பை கண்மூடித்தனமாக ஆதரிக்காமல் நடுநிலை காத்து ஈழத்துக்கு நன்மை தரும் திட்டத்துக்கு ஆதரவு கொடுத்திருந்தால் இன்றைய மோசமான நிலைமை தடுத்திருக்கலாம்.

ஈழப் போராட்டத்தை இந்தியா முழுமையாக ஆதரிக்க வேண்டும். குறிப்பாக தமிழக தலைவர்கள் ஈழத்தின் நன்மை கருதி ஈழத்துக்காகப் போராடும் அமைப்புகளை ஒற்றுமைப்படுத்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். ஈழ அமைப்புகளின் தவறான கொள்கையையும் போக்கையும் கண்டிக்கவும் நிராகரிக்கவும் தயங்கக்கூடாது. கடந்த காலங்களில் செய்யத் தவறியதை இனிமேலாவது செய்ய முன் வர வேண்டும். எமது வேண்டுகோளும் எதிர்பார்ப்பும் இவைகள்தான்.



**கேள்வி:** இந்திய அரசால் தடை செய்யப்பட்டுள்ள புலிகளுக்கு ஆரம்பத்தில் இதே ஆட்சியாளர்கள் தானே பயிற்சியும் ஆதரவும் கொடுத்தார்கள்.?

சி.சுப்பிரமணியம்
அகதி முகாம்
தர்மபுரி.

**பதில்:** நாட்டின் சட்டம் ஒழுங்கை பாதுகாக்கவும் அப்பாவி மக்களை தீய சக்திகளிடமிருந்து காக்கவும் காவல்ப் படையினருக்கு பயிற்சியும் ஆயுதமும் அதிகாரமும் வழங்கப்படுகிறது. மக்கள் விரோத நடவடிக்கைக்காக காவல்ப் படையினர் இவைகளை பயணப்படுத்தினால், அரசுதான் அவர்களுக்கு பயிற்சியும் ஆயுதமும் வழங்கியது என்று அரசு மீது குற்றம் சாட்ட முடியாது. அத்துமீறிய காவல் படையினர் மீது நடவடிக்கை எடுக்கத் தவறி நால்தான் அரசு குற்றவாளியாகிறது.

இதே கோணத்தில்தான் புலிகள் தொடர்பாக இந்தியா மேற்கொண்ட நடவடிக்கையை நாம் பார்க்கிறோம்.

ஈழப் பிரச்சனைக்கு தீர்வு காணவும் தமிழர்கள் தங்களைப் பாதுகாத்து கொள்ளவும்தான் பயிற்சியும் பிற உதவிகளையும் இந்தியா ஈழத் தமிழர்களுக்கு வழங்கியது. பெற்ற உதவிகளை மக்கள் விரோதச் செயலுக்காக புலிகள் பயன்படுத்தினர். தமிழக மண்ணை ஈழப் போராட்ட தளமாகப்பாவிக்க இந்தியா அனுமதித்தது. ஆனால் புலிகள் போதைப் பொருள் கடத்தலுக்கும் இன்னும் பல சட்ட விரோத நடவடிக்கைக்கும் தமிழக மண்ணை துஷ்பிரயோகம் செய்தது. இவைகளைக்கூட இந்திய மக்கள் சகித்துக் கொண்டனர். ஆனால் தங்களின் தலைவரைப் பலி எடுத்ததைத்தான் இந்திய மக்களால் மன்னிக்க முடியாமல் உள்ளது.

1986ல் டெலோ அமைப்பின் மீது புலிகள் தாக்குதலை மேற்கொண்டதற்கு டெலோ இந்தியாவின் கைக் கூலியாக செயல்படுகிறது என்பது டெலோ மீது சுமத்திய குற்றச்சாட்டுகளில் ஒன்றாகும். எல்லா ஈழ அமைப்புகளையும் விட அதிக உதவிகளையும் சலுகைகளையும் இந்தியாவிடமிருந்து பெற்றுக் கொண்டது புலிகள் தான். புலிகள் செய்தால் அது ராஜதந்திரம் அதனையே பிற அமைப்புகள் செய்தால் அது துரோகத்தனம் என்ற போக்குடன் புலிகள் செயல்படுகின்றனர்.

ஈழத் தமிழர்களின் நன்மைக்காகப் புலிகளுக்கு இந்தியா உதவிகள் வழங்கியது உண்மைதான். ஆனால் புலிகள் ஈழத்தமிழர்களுக்கு மட்டுமல்ல இந்தியாவுக்கும் விரோதமாகச் செயல்படுவதால் புலிகள் மீது இந்தியா நடவடிக்கை எடுப்பது தவிர்க்க முடியாததாகி விட்டது. இந்தியா மட்டுமல்ல எந்த நாடாக இருந்தாலும் இதனையே செய்திருக்கும்.

**கேள்வி:** மறவன் புலவு சச்சிதானந்தன் பற்றிப் புகழ்ந்து காசியானந்தன் பாரீஸ் ஈழ நாட்டில் எழுதியுள்ளாரே. நீங்கள் படித்தீர்களா? காசி இப்போது எங்கே இருக்கிறார்? என்ன செய்து கொண்டிருக்கிறார்?

வி.வேதநாயகம்
வவுனியா

**பதில்:** படித்தோம், அண்ணா சாலையில் தமிழில் விளம்பரப் பலகை வைத்து தொழில் புரிந்து தமிழ்நாட்டுத் தலைவர்களைத் தலை குனிய வைத்துள்ளார் சச்சி என்று அவரது வியாபாரத்திற்கு விளம்பரம் செய்துள்ளார் காசி. காசியானந்தன் என்று தவறாக எழுதியுள்ளீர்கள். அவரது உண்மையான பெயர் காத்தமுத்து சிவானந்தன். காத்தமுத்து என்ற பெயர் நாகரிகமாக இல்லாததால் காத்துமுத்துவில் ''கா'' வையும் சிவானந்தனில் ''சி'' யையும் இணைத்து ''காசி'' ஆனந்தன் என்று தந்தையின் பெயரையே மாற்றிய மைந்தன் இவர். இந்தப் பெயரையே பதிவும் செய்து கொண்ட சீர்திருத்தவாதி. இப்போது சென்னை தியாகராஜர் நகர், இந்தி பிரசார சபா எதிரில் இருக்கும் மாடிக் கட்டடத்தில் வசித்து வருகிறார்.


அமரர் ராஜீவ் காந்தி படுகொலையைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளது ஈழத்து ஆதரவாளர்கள் அனைவரையும் சி.பி.ஐ. பிடித்து உள்ளே தள்ளிவிட்டது. ஆனால் காசி ஆனந்தன் மட்டும் பகிரங்கமாக மறைந்து வாழ்கிறார். எப்படி என்கிறீர்களா? அவரது கவித்திறமைதான்! விசாரணைக்கு வந்த சி.பி.ஐ.யிடம் புலிகள் பற்றி கவிதை நடையிலேயே வாக்குமூலம் எழுதிக் கொடுத்து விட்டாராம். சி.பி.ஐ.யினர் அசந்தே விட்டனராம். கவிதை நடையில் வாக்குமூலமா! ஈழத்தவரில் இவர் போன்று ஒத்துழைப்புக் கொடுத்தவர் வேறு யாருமில்லை என்று புகழ்ந்துள்ளனர் சி.பி.ஐ.யினர்.

காசி துரோகம் இளைப்பதிலும், கழுத்தறுப்பதிலும் பேர் போனவர் என்பது எத்தனை பேருக்குத் தெரியும்? மட்டக்களப்புத் தமிழர்கள் இராஜதுரை தலைமையில் தலை நிமிர்ந்து நின்றபோது, அவரது பணத்தில் படித்து வாழ்க்கை நடத்தி வந்த காசி அவருக்கே கழுத்தறுத்தார்! மட்டக்களப்பு மக்கள் இரண்டு பட்டுப் போகக் காரணமானவர் இவர். 1977 தேர்தலின்போது கல்குடா தொகுதியில் நிற்கும்படி அமிர்தலிங்கம் கேட்க, முடியாது, நான் மட்டுநகரில் தான் நிற்பேன் என்று கூற அமிர்தலிங்கமும் ஏற்றுக் கொண்டார். அந்த அளவு செல்லப்பிள்ளை மட்டுமல்ல. தமிழர் விடுதலைக் கூட்டணியில் அதிகாரம் கொண்டவரும் கூட. மட்டு நகரின் உணர்வுகளை மழுங்கடித்தவர் இந்தக் காசி. இராஜதுரைக்கும், அமிர்தலிங்கத்திற்கும் இருந்த முரண்பாட்டைப் பயன்படுத்தி, தானே மட்டு நகரின் தலைவராகப் பார்த்தவர் இந்த சிவானந்தன். நன்றி கொன்ற இந்த நபருக்காக தேர்தல் மேடையில் பேச யாழ்ப்பாணத்திலிருந்து சந்திரகாசன், ஈழவேந்தன், கோவை மகேசன் போன்றோர் மட்டுநகர் சென்றிருந்தனர். இவர்களது பேச்சுக்கள் கிழக்கு மக்களை வடக்கிலிருந்து வேறுபடுத்தியது. தேர்தலில் மட்டுநகர் மக்கள் காசி ஆனந்தனைத் 'துரோகி' எனக் கூறி பாடம் புகட்டி யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைத்தனர்.

தமிழரசுக் கட்சி மேடைகளிலும், பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி மேடைகளிலும் காசி ஆனந்தனது பாடல்களைப் பாடாமல் கூட்டமே ஆரம்பிக்காது. அமிரண்ணா, மங்கை அக்கா என்று மேடைகளில் வாழ்த்துப் பாடியது மட்டுமல்ல, அமிர்தலிங்கத்தின் வீட்டில் அனைவரும் முற்றத்தில் இருந்து தேனீர் அருந்தினால், காசி மட்டும் துணிந்து சமையலறைப் பறனில் ஏறி பனாட்டுச் சாப்பிடுவார். '' மங்கை அக்காவின் கையால் பனாட்டுச் சாப்பிடக் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்று பனாட்டுப் பற்றிக் கவிதை வேறு பாடி அசத்துவார்.

தமிழகத்து மக்களுக்கும், தலைவர்களுக்கும் இவரது துரோக வரலாறு எதுவுமே தெரியாது. திராவிடக் கழக மேடைகளிலெல்லாம் இவரை அழைத்துப் பேச வைப்பார்கள். கூலியாக ரூ. 300 கொடுத்து அனுப்புவார்கள். அமரர் ராஜீவ் காந்தியின் கொலைக்குப் பிறகுதான் இவையெல்லாம் நின்றது.

இராஜதுரைக்கு எப்படி கழுத்தறுப்புச் செய்தாரோ அதேபோன்று அமிர்தலிங்கத்திற்கும் செய்தார். அமிர்தலிங்கம் இறந்த வேளை ஓர் அனுதாபம் கூட தெரிவிக்காத பண்பட்ட தமிழினத் துரோகி இந்த காசி ஆனந்தன். கவித் திறனால் இவர் புகழ் பெறவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணியாலும், அமிர்ந்தலிங்கத்தினாலும்தான் இவர் புகழ் பெற்றவர். இவரது பஞ்சம் போக்க அமிர்தலிங்கம், மங்கையர்கரசி, சிவசிதம்பரம் போன்றோர் தெருத் தெருவாக உண்டியல் குலுக்கி பிச்சை எடுத்துக் கொடுத்த பணத்தில் 84 வரை வாழ்க்கையை ஓட்டியவர். வாங்கித் தின்று, புகழ் சேர்த்து, வீடு கட்டி பெருவாழ்வு வாழ்ந்த இந்த நபர் புலிகள் புகழ் பெற தொற்றிக் கொண்ட இந்தத் துரோகியை தியாகி என்பார்களா யாரா. வது? காட்டிக் கொடுப்பவரை ''காக்கை வன்னியன்'' என்பர் எம்மவர். அதே போன்று துரோகத்தனத்துக்கும் கழுத்தறுப்புக்கும் ''காசி ஆனந்தன்'' என்றே இனி மேல்க் கூற வேண்டும். இவர் போன்று பல தரப்பட்ட சந்தற்பவாதிகளும், கூட்டத்தோடு கூட்டமாகப் புலிகள் இயக்கத்துக்குள் நுழைந்ததினால்தான் தவறான பாதைக்குத் தள்ளப்பட்டனர் புலிகள். இவர் பற்றிப் பல கதைகள் உண்டு. வரும் இதழ்களில் கண்டு கொள்ளலாம். அது வரை இராஜதுரைக்கும், அமிர்தலிங்கத்துக்கும் துரோகம் புரிந்த காசி புலிகளை விட்டு EPDP க்கு தாவாமல் சச்சிதானந்தன் போன்றோர் பார்த்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் மிகப் பெரும் பண வசதியுடன் டக்ளஸ் தேவானந்தே இயக்கம் நடத்தி வருகிறார். இதுபற்றித் தெரிந்தால் தேவானந்தேக்கு கவிதை பாடி இணைந்து விடுவார் அவர்களுடன்.



இப்போது அவர் செய்து கொண்டிருப்பது, காண்போரை எல்லாம் ஐயா நான் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறேன் என்று கூறுவது. (இப்போது மட்டுமல்ல கடந்த 25 ஆண்டுகளாக இப்படி அழுதுதான் மட்டக்களப்பில் வீடே கட்டி முடித்தவர்) சென்னையிலிருக்கும் மாணவர் நகலகத்திலிருந்து (STUDENTS XEROX) மாதம் 5000 ரூபாய் வாங்கிக் கொள்வதை யாரிடமும் கூற மாட்டார். அவரது மட்டக்களப்பு பக்கத்து வீட்டுக்காரன் வந்தாலும் யார் நீங்கள், சந்தேகமாக இருக்கிறது... உங்களை எனக்குத் தெரியாது என்று விரட்டி விடுவார்.

தெருவில் யாரைக் கண்டாலும் உளவுப்படை தன்னைப் பின் தொடர்வதாகக் கூறி சந்தித்தவரையும் மிரளவைத்து கவிஞர் விலகிக் கொள்வார். இப்போதைக்கு இதைத்தான் பகிரங்கமாகச் செய்து கொண்டிருக்கிறார். இரகசியமாக என்னவோ?

மதிப்புக்குரிய ஆசிரியருக்கு,

ஒவ்வொரு மாதமும் ''ஈழ தேசம்'' படித்து வருகிறேன். மாதத்திற்கு மாதம் வித்தியாசமான பல ஆக்கங்களுடன் வளர்ந்து வருகிறது என்பது மிகவும் தெளிவாகத் தெரிகிறது. அத்துடன் கடந்த மார்ச் 1996 இதழில் சகோதரி தவமலர் ஈழப் போராட்டத்தினால் தனது சகோதரர்களுக்கு நிகழ்ந்ததையும் அதனால் அவர்கள் இன்று படுகின்ற கஷ்டங்கள், துயரங்கள் அனைத்தையும் மிகவும் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார். அனைத்தும் என்னை நெகிழ வைத்துவிட்டது. இது போன்று எத்தனையோ சகோதர, சகோதரிகள் தங்கள் உள்ளங்களில் வெளிக்காட்ட முடியாமல் எவ்வளவு கொடூரமான துயரங்களைச் சுமந்து கொண்டு இருக்கின்றனர் என்பதை அறியக் கூடியதாக உள்ளது. இது போன்ற நல்ல ஆக்கங்களைத் தொடர்ந்து தருவீர்கள் என்று எதிர்பார்க்கின்றேன். ஈழத் தமிழர்களின் துயரங்களில் பங்கு கொண்டு இப்படியான கண்ணீர் கதைகளை வெளியிடும் ஈழ தேசத்திற்கு நன்றிகள் பல.

நன்றி

*கா.பரமேஸ்வரன்*
*இராமேஸ்வரம்*

நிஜமுகங்களாக வலம் வரும் பொய் முகங்களை மக்களே அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



# ஈழத் தமிழ் இளைஞரின் கிரிக்கெட் உணர்வு

உலகக் கோப்பைக்கான கிரிக்கெட் இறுதிப் போட்டியின் முன் இரவு நேரம்...

என் நண்பர் வீட்டு தொலைக்காட்சி முன் நானும் நண்பர்களும் ஆரம்பத் துடுப் பாட்ட வீரர்களை இழந்த நிலையில் சிறி லங்கா அணியினர்...

கூடி இருந்த நண்பர்களிட்மோ கவலை...

குறைந்த ஓட்டங்களில் இரண்டு விக் கெட் இழப்புக்கான அனுதாபம்...

ரன் அவுட் முடிவு பற்றிய ஆட்சே பம்...

உண்மையில் அவர்கள் இதயமே உருகி வழிந்தது...

என் மனத்திலோ!......

அன்றைய கோலாகலமான யாழ்நகர்...

சென்ற் ஜோன்ஸ் சென்றல் கிரிக்கெட் போட்டியின் நினைவு அலைகள்...

எவ்வளவு உற்சாகம்... கொண்டாட் டம்... மாணவ மாணவியினரின் அட்டகாச அணிவகுப்புகள். அலங்கார பவனிகள்... இன்றோ!...

யாழ் நகரையே சுடுகாடாக்கி... சென்ற் ஜோன்ஸ் பள்ளியையே பாழடைய வைத்து... கச்சேரியில் பறக்கும் சிங்கக் கொடி... இத்தனைக்கும் காரணமான சிறி லங்கா அரசு. சிறிலங்காவின் பிரதிநிதிக ளான இந்த அணியினர்... சிங்கள இராணு வத்தின் செல் அடி...

விமானக் குண்டுத் தாக்குதல்களுக்கே ஈடு கொடுக்க முடியாமல்... உயிரைக் கையில் பிடித்தபடி.... ஈழத்தில் வாழ முடி யாது. இங்கு வந்த இவர்களின் மனதில்.... சிங்கள அணியினருக்கான அனுதாப அலை... ஏதோ!... என் மனதினை நெருடுகி றது... என் வாய் முணு முணுக்கிறது... மெதுவாகத் தன் நிலையை நிலைப்படுத்தி, முன்னேறும் சிறிலங்கா அணிக்கு ஆதர வான ஆர்ப்பரிப்புகள்... கொக்கரிப்புகள்...

ஆகா...! என்ன அடி!... என்ன அடி!!... நண்பர்களின் ஆர்ப்பரிப்பு.... 83ல் பட்ட அடிகளை,.... பட்ட வடுக்களை மறந்து விட்டார்களா?... இவர்கள். அது மறக்கக்கூ டியதா?...

''இதுவல்லவா அடி! புல்லட் போலப் பாயுதே பந்து பவுண்ட்றிக்கு...

''இது தானடா அதிரடி''.

சிங்கள அதிரடிப் படையினரின் புல் லட்டுக்களால் சல்லடையாக்கப்பட்டு மடிந்த தமிழ் உயிர்களை மறந்து விட்டார் களா?...

என் மனம் கிரிக்கெட்டில் ஒன்ற மறுக் கிறது. ''அங்கே என்னடா? என்றால் சிறி லங்கா அரசு தமிழர்களைக் குண்டு போட் டுக் கொல்லுது. இங்கே?... நீங்கள் இவர்க ளுக்கு கை தட்டுறியள்''. வாய் விட்டுச் சொல்லி விட்டேன்.

ஏதோ நான் கேட்கக் கூடாததைக் கேட்டு விட்டது போலவும்,... கெட்ட வார்த்தை பேசியது போலவும்... என்னை இழிவாகப் பார்த்தார்கள். எனது ஈழத் தமிழ் நண்பர்கள்....

''ஏனடா நண்பா இதில் இனத் துவே சத்தைக் காட்டுறாய். எங்கட சிறிலங்கா தானே ''கப்பை'' வெல்லப் போகுது இத னாலே எங்களுக்குப் பெருமைதானே!

''எங்கட சிறிலங்கா''... சம்மட்டி அடி விழுந்தது என் மனதில்.

''ஐயோ'' எனவாய்விட்டு கத்த வேண் டும் போல் இருந்தது எனக்கு...

சிறிலங்கா ஒரு தீவாக இருக்கலாம். அதில் ஈழல், சிறிலங்கா என இரண்டு நாடு கள் இருக்குதல்லவா!

சிங்களத்துடன் ஒட்டி வாழ முடியா மல் வெட்டிக் கொண்டு போக நினைத்த ஈழத் தமிழர்கள்... அதற்காக இழந்த இழப் புக்கள்... விலையாகக் கொண்டுத்த உயிர்



கள்... பட்ட கஷ்டங்கள்... இதையெல்லாம் மறந்து...

''எங்கட சிறிலங்கா'' என்று சொல்லு துகள் இந்த மரமண்டைகள்.

''என்ன?... உங்கட சிறிலங் காவோ?... அப்போ... ஈழம் கேட்டதெல் லாம்'... ஆத்திரத்துடன் கேட்டேன்.

''இப்போ ஏன் மச்சான் விளையாட் டில் அரசியலைக் கலக்கிறாய்?...

ஈழம் கேட்டதெல்லாம் அரசியல்!

''அரசியல் வேறு... விளையாட்டு வேறு''... என விளக்கம் தந்தார் ஒரு நண்பர்.

'ஓ' இவர் டக்ளஸ் தேவானந்தே அண் ணாச்சியின்ர வழியினரோ. எனக்குள் கேட் டுக் கொண்டேன்.

ஏன் மச்சான் சிறிலங்கா அணியில் தமி ழன் இல்லையே? எங்கட ''முத்தையா முர ளிதரன்''... தமிழன்தானே!.

ஓ... ஓ... அப்படி என்றால் அந்தக் கால... ''குமார சூரியர்'' முதல் கதிர்காமர் - தேவானந்தே எல்லாம் தமிழர் என்கிறி யளே!

பேர் மட்டும் தமிழிலே இருந்தால் போதாதடா? மனதில் தமிழன் என்ற நினைப்பு வேணும்! உணர்வு வேணும்!!

தமிழை! தமிழனை!! மதிக்கத் தெரிய ணும். தமிழினத்தைக் காட்டிக் கொடுத்து, அந்தத் துரோகத்துக்குப் பரிசாக அவர்கள் மந்திரிப் பதவியை வாங்கினார்கள். இவன் என்னத்தக் கொடுத்து சிங்கள அணியிலே இடத்தைப் பிடித்தானோ! அந்த ஆண்டவ னுக்குத்தான் வெளிச்சம்... இப்ப விளை யாட்டுப் பாக்கிறதை குழப்பாதே! சிறிலங் காவின் அதிரடி தூள் கிளப்புகிறது.

''உன் தத்துவததை இன்னொரு நாளைக்கு சொல்லு கேட்போம் என்று என் கழுத்தைப் பிடித்து வெளியில் தள்ளிவிட்டு கதவை இழுத்து சாத்தி விட்டார்கள்,'' என் நண்பர்கள்.

இனத்தால் ஏற்பட்ட இணைப்பை...
மொழியால் ஏற்பட்ட பிணைப்பை...
இதுவரை பழகிய பாசத்தை...
நட்பை...

எல்லாவற்றையும் அறுத்து...
வெளியே தள்ளி விட்டார்கள்...
வேதனையுடன் கால்கள் நடந்தன...
நெஞ்சம் கனத்தது.

வீட்டுக்கு வந்த நான், அப்படியே போய்ப் படுக்கையில் விழுந்தேன். சுழலும் விசிறியைப் பார்த்தபடியே... மல்லாந்து கிடந்தேன்.

''தம்பி சாப்பிட்டுட்டுப் படுமோனே'' என்ற அம்மாவின் குரல் என்னை இவ்வுல குக்கு மீட்டு வந்தது.

''வேண்டாம் அம்மா. நான் சாப்பிட் டுட்டேன்'' என்றபடியே திரும்பிப் படுத் துக் கொண்டேன். தூக்கமே வரவில்லை. சாப்பிட வேணும் என்ற எண்ணமே வர வில்லை.

வில்ஸ் உலகக் கோப்பை கொழும்பை குலுக்கி முடிந்தது என்னையும் வாட்டி முடிந்தது. ஒருவாரம் கழித்தது.

சிங்கப்பூரில் சிங்கர் கிண்ணம்! பாக் கிஸ்தானுடன் மோதும்போது ''ஜெயசூ ரியா விளாசிறான் என்று துள்ளிக் குதித்த னர்! இதனை விளையாட்டு என்று என் னால் எடுத்துக் கொள்ளமுடியவில்லை! தமிழரே சிறிலங்காவில் இருக்கக்கூடாது! அது சிங்கள நாடு என்று இடித்துரைத்து சிங்களத்தையும் அரசமரத்து இலையையும் தேசியக் கொடியில் பதித்து தங்கள் வெறித் தனத்தைக் காட்டிவரும் அந்த வெறி கொண்ட சிங்களவர் விளையாடுவது விளையாட்டா?

ஈழத் தமிழர் பிரச்சனையில் அவுஸ்தி ரேலியாவில் இருக்கும் ஆங்கிலேயருக் குள்ள உணர்வு ஈழத்தமிழரில் உரசிப் பார்த் துத் தெரிந்து கொள்ள வேண்டியதாயிருந் தது.

கொழும்பில் இருக்கும் சிங்களவர் சார்பு தேவானந்தேக்களின் கட்சிகள் ஆர்ப் பரிப்பதில் நியாயம் உண்டு. அவர்கள் சிங்க ளவரின் பணத்தில் வாழ்க்கை ஓட்டுபவர் கள். பணம் மட்டுமா சிங்களவரது, பாது காப்பு, தங்கும் வசதி, தேவைகளுக்கான கோரிக்கைகளை நிறைவேற்ற மந்திரிகளின் நேரடித் தொடர்பு இப்படியாக ஈழத் தமிழ ரின் துன்பங்களில் இன்பம் காணும் அந்த விடுபட்ட போராளிகள் குதூகலிப்பது கட மையுடையது. ஆனால் அடித்து விரட்டப் பட்ட அகதிகளான நாமும் வடக்குக் கிழக் கில் சிக்குண்டு வாழும் எம்மவரும் சிங்கள வரின் மட்டை வீச்சைக் கண்டு உறவு கொள் வாரா?

சிங்கர் கிண்ணம் பாகிஸ்தானிடம் சிக் கியதில் நிம்மதியடைந்தேன். ஏனென் றால், தங்கள் செயல்பாடுகளுக்கு புத்தர் சைகை காட்டி ஆசீர்வசித்து விட்டார். தமி ழரை ஒழித்துக் கட்டும் தங்கள் சேவைக்கு அரசமரத்தார் ஆசி வழங்கிவிட்டார் என்று எங்கள் மக்களை உண்டு இல்லை என்று பார்த்துவிடுவார்கள்! தமிழர் தப்பிக்க சிங் கர் கிண்ணம் தவறியதில் மகிழ்ச்சியே!

**-மகரதேனி**

## அவசரகால சட்டம்

அவசரகாலச் சட்டத்தை இலங்கையில் நடைமுறைப் படுத்துவதற்கான பிரே ரணை பாராளுமன்றத்தில் 36 கூடுதல் வாக் குகள் பெற்று நிறைவேறியுள்ளது. அரசாங் கத்துடன் சேர்ந்து பிரேரணைக்கு ஆதரவாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், EPDP, POLT ஆகியவற்றின் உறுப்பினர்கள் வாக்க ளித்துள்ளனர். 116 பாராளுமன்ற உறுப்பி னர்கள் பிரேரணைக்கு ஆதரவாகவும் 80 உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்துள் ளனர். ஐக்கிய தேசிய கட்சி, தமிழர் விடுத லைக் கூட்டணி ஆகியும் இலங்கை முற் போக்கு முன்னணி உறுப்பினர்கள் மட்டும் பிரேரணையை எதிர்த்து வாக்களித்துள்ள னர். நவலங்கா சம சமாஜக் கட்சி இந்தப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க வில்லை என்று முன்னர் தெரிவித்திருந்தது. பின்பு அக்கட்சியைச் சேர்ந்த பிரதி அமைச் சர் பிரேரணையை ஆதரித்து வாக்களித்தார். ஏனைய உறுப்பினர்கள் அனைவரும் சபை யில் இருக்கவில்லை என்றும் கூறப்படுகி றது.

# இராணுவக் காவலில் கோணேஸ்வரர்

திருகோணமலையில் பிரசித்தி பெற்ற கோணேஸ்வரர் ஆலயத்தின் தீர்த்தத் திரு விழா 19.4.96 அன்று நடைபெற்றது. தமிழ் மக்களின் புனிதத் தலங்களில் அதுவும் ஒன்று. திருவிழாவில் கலந்து கொள்ள பல பகுதிகளிலிருந்தும் தமிழ் மக்கள் வந்தனர். சிங்கள இராணுவம் அவர்கள் அனைவரை யும் தடுத்தது மட்டுமின்றி வானத்தை நோக் கிச்சுட்டும், துப்பாக்கிகளால் அடித்தும் மக் களை விரட்டினர். இதனை ஒட்டி திருமலை நகரில் கடைகள் அடைக்கப்பட்டு போக்கு வரத்துகள் தடுக்கப்பட்டு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். கடல் வழியாகக் கோவி லுக்கு வந்த மக்களை கடற்படையினர் அடித்து விரட்டிப் படகுகளையும் சேதப்ப டுத்தினர்.

நகரசபைத் தலைவர் லிங்கேஸ்வரன் இதுபற்றி இராணுவத்துடன் பேசுவதற்காக தலைமையகம் சென்றபோது அவரை இரா ணுவத்தினர் துப்பாக்கியால் தாக்கிக் காயப் படுத்தினர். கடுமையான காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள் ளார் லிங்கேஸ்வரன்.

தமிழரது புனித ஆலயங்களை இன்று நேற்றல்ல நாற்பது ஆண்டுகளுக்கு முன்பி ருந்தே அழித்துவிடத் தீர்மானித்து விட்ட னர் இந்த சிங்களவர்கள். கதிர் காமத்திலி ருக்கும் முருகன் கோவிலுக்கு தமிழ் மக்கள் எவரும் இப்போது செல்ல முடியாது. மலையடிவாரம் முழுவதும் புத்த கோவிலி னால் ஆக்கிரமித்து விட்டார்கள் பௌத்தர் கள். முருகனைத் தரிசிக்க வழியே கிடை யாது. முருகனுக்கு சமாதி கட்டி, பாரிய பௌத்த ஆலயம் ஒன்றினை அரசு செல வில் கட்டி வருகின்றனர் புனித புத்தர்கள்.

திருகோணமலையில் இருக்கும் கோணேஸ்வரர் ஆலயத்தைச் சுற்றியும் பௌத்த கோவில்கள் கட்டப்பட்டு விட் டன. புத்தரது அனுமதி பெற்றுத்தான் கோணேஸ்வரரைக் காணச் செல்ல வேண் டும். பௌத்த கோவிலுக்குப் பாதுகாப்பாக அங்கே இராணுவமும் காவலுக்கு நிற்கி றது. இந்த இராணுவத்தினர்தான் தமிழ் பக் தர்களை அடித்து விரட்டியவர்கள். தமிழர் இறைவழிபாட்டுக்கு இராணுவத்திடம் அனுமதி பெற வேண்டிய உரிமைதான் ஈழத் தமிழருக்குக் கிடைத்திருக்கிறது!

# கிழக்கில் புதிய முகாம்கள்

கிழக்கிலங்கையில் சிங்கள இராணுவத்தி னரின் அட்டூழியங்கள் நாளுக்கு நாள் அதிக ரித்துக் கொண்டே இருக்கிறது. கடந்த சில வாரங்களாக இராணுவத்தினர் மட்டக்க



ளப்பு மாவட்டத்தில் களுவன்கேணி, கோளாவில் மற்றும் அதன் அருகில் உள்ள பிரதேசங்களில் புதிதாக முகாம்கள் அமைத்து வருகின்றனர். இதனால் இப்பகு தியில் வாழும் தமிழர்கள் அருகில் உள்ள வேறு இடங்களுக்கும் இடம் பெயர்ந்து செல்ல முடியாத சூழ்நிலையில் மிகவும் அச்சத்துடன் வீடுகளில் அடைந்து கிடக்கின் றனர். அத்துடன் இராணுவத்திற்கென புதி தாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டு விசேட பயிற்சி பெற்று வந்தவர்களில் 7 ஆயிரம் பேர் புதிதாக அமைக்கப்படும் முகாம்க ளுக்கு அனுப்பப்பட்டு விடுவோம் என்ற பயத்தினால் பயிற்சி முகாமை விட்டுத் தப்பி ஓடிவிட்டனர்.

விரோதிகள் எப்போதும் விரோதிகளாக இருப்பதில்லை. சில காரியங்களைச் சாதிக்க நண்பர்களாவதும் உண்டு.

படிப்பகம்

www.padippakam.com



# சச்சிதானந்தனின் பல முகங்கள்

23.12.95ல் 'தினமணி'யில் சச்சிதானந்தன் தமிழகத்தில் தமிழீழ அகதிகள் நிலை பற்றிக் கட்டுரை எழுதியிருந்தார். தமிழீழ அகதிகளை மூன்று பிரிவினராகப் பிரித்து மூன்றாம் பிரிவினரை வன் செயலாளர் என்றும் சமூக விரோதிகள் என்றும் வர்ணித்தார். இவர்களால் தமிழீழ அகதிகளுக்கு அவப் பெயர் உருவானது என்று விளக்கினார்.

இதைக் கண்டித்து ஜனவரி 1996 ஈழ தேசத்தில் ''பிஞ்ஞுகன்'' கட்டுரை எழுதினார். அதில் சமூக விரோதி சச்சிதானந்தன் திக்குத் திசையற்று வாடி வதங்கும் பிரிவினரைச் சமூக விரோதிகள் என்று வர்ணித்தது தவறு என்றும் அவர் ராஜீவ் காந்தி கொலையை மறைத்து தமிழீழ இளைஞர்களுக்கு அவப் பெயர் சூடியது முறையற்றது என்றும் சுட்டிக் காட்டி சச்சிதானந்தனின் பின்னணிகளை அம்பலப்படுத்தினார்.

1-7, 3.96ல் பரிஸ் 'ஈழ நாடு' ஏட்டில் தமிழீழ சைவர்களுக்கு சைவ உலகம் உதவ வேண்டும் என்று சச்சிதானந்தன் கட்டுரை வரைந்தார். இதையும் கண்டித்து மார்ச் 1996 'ஈழ தேசத்தில்' ''பிஞ்ஞுசகன்'' கட்டுரை எழுதினார். அதில் தமிழீழத்தில் மக்கள் மத வேறுபாடு இல்லாமல் ஒன்றுபட்டு போராடுகிறார்கள் என்றும் சச்சிதானந்தன் மதப் பிரிவினையை ஏற்படுத்தும் பாணியில் எழுதியுள்ளார் என்றும் கூறி அடுத்த ''ஈழ தேசம்'' மடலில் சச்சிதானந்தனின் பல முகங்களை மக்களுக்கு விளக்குவோம் என்றும் அறிவித்தனர்.

22-28.3.1996 பரிஸ் 'ஈழ நாடு' ஏட்டில் கவிஞர் காசி ஆனந்தன் சச்சிதானந்தனின் புகழ் பாடிக் கட்டுரை எழுதினார். சந்தர்ப்ப சூழ்நிலையின் அடிப்படையில் பார்த்தால் காசி ஆனந்தனின் கட்டுரைக்கும் ''பிஞ்ஞுகன்'' கட்டுரைக்கும் தொடர்பு உண்டு என்பது வெளிப்படை.

இந்த நிகழ்ச்சியில் சச்சிதானந்தனின் உலகளாவிய தொடர்புகளும், ஆளுமையும், சூழ்ச்சிகளும் அம்பலமாயின. ஆனபடியால் தமிழ் மக்கள் சச்சிதானந்தனின் பின்னணியை நன்கு அறிந்திருப்பது அவசியம். அவருடைய பல முகங்களை மக்கள் காண்பது நல்லது.

சச்சிதானந்தனின் வெளிப்படைத் தோற்றத்தை மட்டும் அறிந்தவர்கள் இலகுவில் ஏமாந்து விடக்கூடும். கவிஞர் காசி ஆனந்தனின் கட்டுரை இதற்கு ஓர் எடுத்துக் காட்டு, மக்கள் மத்தியில் நன் மதிப்புப் பெற இவர் சமூகப் பணிகளில் பங்கு கொள்வதும் சந்தர்ப்பம் சூழ்நிலைகளுக் கேற்ப பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதுவதும் புத்தகங்கள் அச்சிட்டு விற்பனை செய்வதும் இவருக்குக் கைவந்த கலை.

ஆனால் திரை மறைவில் சச்சிதானந்தனின் திருவிளையாடல்கள் மிகவும் கண்டனத்துக்குரியவை. இதில் பிரதானமானது சச்சிதானந்தனுக்கும் புளொட் இயக்க முன்னாள் தலைவர் முகுந்தனுக்கும் இருந்த நெருக்கமான உறவுகள் கொடுக்கல் வாங்கல்கள், அரசியல் சூழ்ச்சிகள் ஆய்வுக்குரியவை.

முன் எழுதிய கட்டுரைகளில் இவ்விடயத்தைத் தொட்டும் தொடாமலும் சுட்டிக் காட்டினார். இதை முற்றும் முழுவதுமாய் விவரிப்பது அவசியமாகிறது. காசி ஆனந்தன் சச்சிதானந்தனை ஈழப் புலிகளின் ஆதரவாளராகக் காட்டுகிறார். இது ஒரு சந்தர்ப்பவாதத் தோற்றம்.

முகுந்தன் ஈழப் புலிகளுடன் இருந்து பிரிந்து அவர்களுக்கு எதிராகப் புளொட் இயக்கத்தை உருவாக்கி வந்தவர். கிளிநொச்சி நிக்கவ ரெட்டியா வங்கிக் கொள்ளையில் 8 கோடி ரூபாய்களையும் எடுத்து இந்த முதலை தமிழ் நாட்டில் இருந்து முதலீடு செய்து பல கோடிகளாகப் பெருக்கி கொடி கட்டிப் பறந்தவர். இவருக்கு பல தேசங்களில் இருந்து சச்சிதானந்தன் அறிக்கைகள் அனுப்பி ஆதரவு கொடுத்து வந்தவர். காசி ஆனந்தன் கூறியபடி மொரீசியப் பிரதமர் ஜெகநாத் உடன் தொடர்பு கொண்டு முகுந்தன் அவரைச் சந்தித்து உலகப் பிரசித்தி பெற ஒத்துழைத்தவர்.

முகுந்தன் 1985 அளவில் தன் ஆதிக்கத்துக்கு ஆபத்து தோன்றுகிறது என்ற பயத்தில் எதிரிகளை (சக தோழர்களை) மிருகத்தனமாய்ச் சித்திரவதைகள் செய்து கொலைகள் பல புரிந்தவர். இந்த வெறியாட்டத்தின் மகுடமாகத் தன்னையே வளர்த்துவிட்ட வசந்தன் என்ற சந்ததியாரைக் கொலை செய்தவர்.

இவை யாவும் சச்சிதானந்தத்துக்குத் தெரியும் இருந்தும் இருவருக்கும் இடையிலான உறவுகளை முறிய விடாமல் காப்பாற்றி 1985க்குப் பின் முகுந்தனிடம் பல லட்சங்களைப் பெற்று அண்ணா சாலையில் காகிதப் பொறி அச்சகம் ''காந்தளகத்தை'' நிறுவினார். 1988ல் முகுந்தன் கொழும்பில் கொல்லப்பட்டதும் முகுந்தனிடம் பெற்ற பணம் எல்லாம் சச்சிதானந்தனி



டமே சிக்கிக் கொண்டது. சென்னை அச்சகம் மூலம் உலகில் கொடி கட்டிப் பறக்கிறார் சச்சிதானந்தன். ஆனால் பின்னணி சிலருக்குத்தான் தெரியும். முகுந்தனுக்கு தம் உயிரையும் பணயம் வைத்துப் பணம் சேர்த்தவர்கள் புளொட் போராளிகள். அதில் சுகம் கண்டவர்கள் சச்சிதானந்தம் போன்ற தந்திரசாலிகள். புளொட் போராளிகள் சச்சிதானந்தனிடம் பணம் கேட்க தமக்கே உரிய பாணியில் இந்தியக் காவல் துறையிடம் முறையிட்டு யாவற்றையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டார்.

தனிமனிதனுக்கும் சமூகத்துக்கும் உள்ள உறவுகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1, தன்நலங்களுக்காக சமூகத்தைப் பாவித்தல், 2. தன் நலமும், சமுதாய நலமும் சேர்த்து செயல்படல், 3. தன் நலத்தை மறந்து சமூகத்தை வளர்த்தல்.

சச்சிதானந்தன் இரண்டாம் பிரிவைச் சேர்ந்தவர். இரண்டாம் பிரிவில் இருவகை உண்டு. ஒன்று தன் நலத்தைக் குறைத்தும் சமூக நலனைக் கூட்டியும் செயல்படல், மற்றொன்று தன் நலனைக் கூட்டியும், சமூக நலனைக் குறைத்து மதித்துச் செயல்படுபவர். பெரும்பாலும் வாணிப மனோநிலை இப்படிப்பட்டதே ஆகும். சுரண்டும் வர்க்கத்தின் சுபாவமும் இதுவே! சமூகப் பணி ஒரு போலி வேடம். வணிகப் பெருக்கத்துக்கு சமூகப்பணி என்பது இவர் போன்றோருக்குப் பெரும் துணை. அமெரிக்கா இந்நிலைக்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டு. சச்சிதானந்தனின் வெற்றிகளுக்கு இதுவே அடித்தளம், எம்மவர் இதை இனங்கண்டு கொள்வது நல்லது.

1947-1976களில் தந்தை செல்வா தலைமையில் ஈழத் தமிழினம் ஒன்றுபட்டு விடுதலையை நோக்கி தீவிரமாக முன்னேறியதும் சச்சிதானந்தனும் அயராது உழைத்தவர். 1976ல் செல்வா மறைவுக்குப் பின் அமிர்தலிங்கம் தலைவரானார். பிறநாடு செல்லும் வரை கூட்டணித் தூண்களில் ஒன்றாயிருந்தார். சச்சி வெளிநாடுகளில் இருக்கும் பொழுது முகுந்தன் கொடி கட்டிப் பறக்க ஆரம்பித்தார். சச்சிதானந்தன் அவருடன் நெருங்கி அவருக்கு நம்பிக்கையாளரானார். 1988ல் முகுந்தன் கொல்லப்பட்டார். இப்போது புலிகளின் கை ஓங்கியிருக்கிறது. சச்சிதானந்தன் புலிகளின் ஆதரவாளனாக வேடம் போடுவதில் வியப்பில்லை. அவருடைய வணிக நலனுக்காக இந்தியாவுக்கு இணங்கி நடக்க நிர்ப்பந்தமும் உள்ளது. ஆனபடியால் மீனுக்கு தலையையும், பாம்புக்கு வாலையும் காட்டி நாடகம் நடத்துகிறார். இவர் இந்த இரட்டை வாழ்வை ஓர் கலையாகக் கடைப்பிடிக்கிறார். அடிக்கடி பத்திரிகைகளில் தமக்குச் சாதகமான நிலைமைகளைத் திரித்து எழுதித் தம்மை முதன்மைப்படுத்திக் கொள்கிறார்.

இந்த அந்தரங்கத்தை அறியாத பொது மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள். இவருடைய திருவிளையாடல்களால் ஈழமக்களுக்கு ஏற்பட்ட அவமானங்கள் பல என்பதனால் இதை எழுதுகிறேன்.

-கந்தன்

## புலி அகதிகள்

தமிழ் நாட்டில் இருக்கும் அகதி முகாம்கள் அனைத்தும் பொலிசாரின் தீவிர சோதனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. தேர்தல் வேளையில் வோட்டுப் போட்டுவிடுவார்கள் என்ற பயத்தில் இந்தச் சோதனையும், கட்டுப்பாடும், இறுக்கமும். குறிப்பாக வை.கோபால்சாமிக்குப் போட்டு விடுவார்கள் என்ற அறிவுரையின் பேரில் இந்த நடவடிக்கை என்று பொலிசார் தெரிவித்தனர்.

வை.கோ. என்றால் விடுதலைப் புலி, விடுதலைப் புலிகள் என்றால் ஈழத் தமிழர் என்ற எண்ணம் இன்னமும் தமிழ்நாட்டை விட்டு விலகவில்லை. மேற்கண்ட இந்த எண்ணம் கடந்த பல ஆண்டுகளாக ஈழத் தமிழரை வாட்டி வதைத்து வருகின்றது.

வை.கோ. விடுதலைப் புலியாக இருக்கலாம். ஆனால் ஈழத் தமிழர் எல்லாம் விடுதலைப் புலிகள் அல்ல. இது பற்றி யாரிடம் எடுத்துச் சொல்வது? யாரிடம் முறையிடுவது? எல்லாம் நன்மைக்கே! என்ற போக்கில்தான் இன்றைய ஈழத் தமிழர்களின் வாழ்க்கை!

## நிகழ்ச்சி ஒன்றில் சந்திரிகா

இலங்கை இராணுவத்தின் வீரம் செறிந்த சேவைகளைக் கௌரவிக்கும் முகமாக கொழும்பில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பேசுகையில், தேசியப் பாதுகாப்பு நிதியில் இருந்து 2 கோடி 50 லட்சம் ரூபா மூலம் போர்முனையில் தீரத்துடன் போராடி உயிரிழந்த இராணுவத்தினரின் குழந்தைகளுக்கு புலமைப் பரிசில் வழங்கப்படும். அத்துடன் இந்தக் குடும்பங்களுக்கு காணி, வீடுகள் வழங்கப்படும். தனியார் நிறுவனங்களின் சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் வகையில் ஆயுதப் படையினருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## வீடுகளை இழந்தவர்கள்

உலகம் முழுவதிலும் 250 லட்சம் மக்கள் தங்களின் வீடு வாசல்கள இழந்து தவிக்கின்றனர். இவர்களில் 70 லட்சம் மக்கள் இலங்கைத் தீவில் இருந்து சிறிலங்கா அரசின் கொடூரமான அட்டூழியங்களால் வீடுகளையும் மற்றும் அனைத்து உடமைகளையும் இழந்தவர்கள். என்று அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் அதிகாரிஒருவர் தெரிவித்துள்ளார்.

## அகதி முகாமில் ஈ.பி.டி.பி.யினர் தாக்கப்பட்டனர்

ஈழத் தமிழர்களை அழிக்கும் சிங்கள இராணுவத்துக்கு ஆள் பிடித்துக் கொடுப்பதற்காக ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினர் அசோக் தன் பரிவாரங்களுடன் சென்னை வந்துள்ளார். பல அகதி முகாம்களுக்குச் சென்று சந்திரிகாவின் புகழ் பாடி சந்திரிகாவுக்கு தேவானந்தே துணை போவதன் மூலம் இனப் பிரச்சனைக்கு தீர்வு காண முடியும் என்றும் பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகிறார்.

முகாம்களுக்கு செல்லும் ஈ.பி.டி.பி.யினர் அங்குள்ள இளைஞர்களுக்கு ஆசை வார்த்தை கூறி கொழும்புக்கு அழைத்துச் செல்லும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளனர். இலங்கை செல்வதற்கான பயணச் செலவை இலங்கை அரசு பொறுப்பெடுக்கும் என்றும், கொழும்பில் இறங்கிய உடன் ரூபா 5,000மும், பின் மாதாந்தம் ரூபா 3,000மும் வழங்கப்படும் என்றும் உறுதி கூறி வருகின்றனர். ஆள் பிடித்துத் தருவதாகக் கூறி தரகர் ஒருவர் ரூபா 50,000ஐ வாங்கிக் கொண்டு ஈ.பி.டி.பி.க்கு தண்ணி காட்டி விட்டார்.

தங்களின் முயற்சியில் தோல்வி கண்ட ஈ.பி.டி.பி.யினர் மக்களை மிரட்டும் நடவடிக்கையில் இறங்கி உள்ளனர். கும்மிடிப்பூண்டி அகதி முகாமில் உள்ள இளைஞர்களை தங்களுடன் கொழும்புக்கு வரும்படியும் மறுத்தால் அவர்களை எப்படிக் கொண்டு போவது என்று தங்களுக்குத் தெரியும் என்றும் மிரட்டி உள்ளனர். இதனால் ஆத்திரம் அடைந்த முகாம் மக்கள் 8.4.96 அன்று இவர்களை தாக்கி உள்ளனர். தாக்குதலை தாக்குப் பிடிக்க முடியாமல் ஓடியவர்கள் தங்களைத் தாக்கியவர்கள் புலிகள் என்று சிப்கோ:_ காவல் நிலையத்தில் முறையிட்டனர் இரு முதியவர்களை காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்ற காவல்த் துறையினர் விசாரணைக்குப் பின் அவர்களை விடுவித்துள்ளனர்.

கும்மிடிப்பூண்டி அகதி முகாமில் நடந்த சம்பவம் குறித்து விசாரணைக்குச் சென்ற துணைக் கண்காணிப்பாளர் யாராவது ஆள் பிடிக்க வந்து மிரட்டினால் தங்களுக்கு தகவல் தரும்படி மக்களுக்கு அறிவுறுத்திச் சென்றுள்ளார்.

மேற்கண்ட இயக்கத்தினர் கொள்கை என்னவாக இருக்கும்? சந்திரிகாவுக்கு ஆள் பிடிப்பது இவர்களது கொள்கை! இதற்காக இவர்களுக்குக் கிடைப்பது என்ன? வெறும் பணம் தானே! இந்தப் பணத்தைச் சம்பாதிக்க எங்கள் இனமா இவர்களுக்குக் கிடைத்தது? விடுதலைக்காகப் போராடப் போகிறோம் வாருங்கள் என்று கூறினால் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் தயாராக இருக்கின்றனர் முகாம்களில். இது என்ன 5,000மும் 3,000மும், கேட்கவே வெட்கமாக இல்லை? விடுதலைப் போர் இப்படிப் பணத்துக்கு விலை போகிறதா? வெட்கம் கெட்ட இந்த இயக்கத்தவரை ஈழத்தவர் எப்படி பார்த்துக் கொண்டு பொறுமையுடன் இருக்கின்றனர்? ஒருநாள் பாடம் புகட்டப் படும்!

www.padippakam.com



# எமது குரல்

## பிரச்சனைகளுக்கு தீர்வு காண இனக்கலவரம்

தமிழர்களை 1983ல் அழித்தது போன்ற இனக் கலவரத்தை மீண்டும் ஏற்படுத்த சில சக்திகள் திட்டமிட்டு வருகின்றன. புலிகள் கொழும்பிலோ அல்லது சிங்களப் பகுதியிலோ மீண்டும் ஒரு தாக்குதலை மேற்கொண்டால் அதனை சாக்காக வைத்து மீண்டும் ஒரு இனக் கலவரத்தை ஏற்படுத்தி தமிழர்களை அழிக்க, கொழும்பைச் சேர்ந்த இன வெறியர்கள் திட்டமிட்டு வருகின்றனர். பழைய குற்றவாளிகளும் குண்டர்களும் ஒன்று திரட்டப்பட்டு என்ன செய்ய வேண்டும் எப்படிச் செய்ய வேண்டும் என்று திட்டம் தீட்டப்பட்டு வருகிறது. இதற்காக பட்டாக்கத்திகளும், பெட்ரோல் குண்டுகளும் இரகசியமாக தயாரிக்கப்பட்டு வருகிறது. அத்துடன் அண்மையில் இராணுவத்தில் சேர்க்கப்பட்ட ரவுடிகளும் தங்கள் துப்பாக்கிகள் தயார் நிலையில் இருப்பதாகக் கூறியுள்ளனர். இது தவிர தமிழர்களின் குடியிருப்புகளும் தங்கி இருக்கும் இடங்களும் கணக்கெடுக்கப்பட்டு வருகின்றன. அப்பாவிச் சிங்கள மக்கள் மீது புலிகள் மேற்கொள்ளும் தாக்குதலுக்கு பதிலடியாகவே இது அமையும் என்று காடையர்களுக்கு போதிக்கப்படுகிறது.

இதற்கு வெள்ளோட்டமாக 1983ல் நடந்தது போன்று ஒரு சம்பவம் வெலிக்கடைச் சிறைச்சாலையில் நடைபெற்றுள்ளது. புலிகள் என்று சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட தமிழ் பெண்கள் வெலிகடைச் சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டுள்ள சிங்கள பெண் குற்றவாளிகள் சிறை அதிகாரிகளின் தூண்டுதலின் பேரில் தமிழ் பெண்களைத் தாக்கி உள்ளனர். இத்தாக்குதலில் பல தமிழ் பெண்கள் படுகாயம் அடைந்துள்ளனர், இதில் சிறிஸ்கந்த ராணி என்ற பெண்ணின் நிலை மிகவும் மோசமானதால் கொழும்பு அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சிங்கள இராணுவம் கைப்பற்றிய போது வெளியேறிய தமிழ் மக்களை திரும்பும்படி, அரசு வருந்தி அழைத்தும், மக்கள் திரும்ப மறுத்து விட்டனர். புலிகளின் தடையும் இதற்கு காரணமாகும். தமிழ் மக்களை மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி தம் வெற்றியை நிலைநாட்ட பல முயற்சிகளை அரசு மேற்கொண்டு வருகிறது. முதற்கட்டமாக அரசு ஊழியர்களை யாழ்ப்பாணத்துக்கு வரவழைக்கும் நோக்கத்துடன், அவர்களின் ஊதியத்தை யாழ்ப்பாணத்திற்கு போய் பெற்றுக் கொள்ளும்படி அரசு ஊழியர்களை பணித்துள்ளது. மக்கள் இல்லாத யாழ்ப்பாணத்துக்கு அத்தியாவசியப் பொருட்களை அனுப்பத் தயாராக உள்ள சிங்கள அரசு, மக்கள் குடியமர்ந்துள்ள கிளிநொச்சிக்கு அனுப்பத் தயங்குகிறது. கிளிநொச்சிக்கு அத்தியாவசியப் பொருட்களை அனுப்பினால் மக்கள் யாழ்ப்பாணத்துக்கு திரும்ப மாட்டார்கள் என்பதற்காகவே இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. மேலும் கொழும்பில் உள்ள தமிழர்களை துன்புறுத்தினால் அவர்களும் கொழும்பை விட்டு வெளியேறி யாழ்ப்பாணத்துக்கு போய் விடுவார்கள். இதன் மூலம் புலிகளின் நடமாட்டத்தையும் கட்டுப்படுத்த முடியும் என்ற எதிர்ப்பார்ப்பிலும் தான் கொழும்பில் தமிழர்களுக்கு பல இன்னல்களைக் கொடுத்து வருகிறது. புலிகளின் கொடூரத்துக்கு பயந்தே கொழும்பில் தமிழர்கள் தங்கி உள்ளனர். இப்படி பல வழிகளிலும் தமிழர்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்ப எடுத்த முயற்சிகள் எதிர்பார்த்த பலன் தராததால், இறுதி முயற்சியாக இனக் கலவரத்தைத் தூண்டும் முயற்சிகள் நடைபெறுகின்றன. இச்சதித் திட்டத்துக்கு சில பௌத்த பிக்குகளும் சில இராணுவ அதிகாரிகளும் பின்னணியில் உள்ளனர். இப்போது இவர்கள் எதிர்பார்த்திருப்பது தமிழர்களை எரிப்பதற்கு ஒரு சிறு பொறிதான். அதனை புலிகள் கொழும்பிலோ அல்லது சிங்களப் பகுதியிலோ நடத்தும் தாக்குதலின் மூலம் இவர்களுக்கு கிட்டும் என்று எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

இலங்கையின் இனப் பிரச்சனைக்கு சந்திரிகா முன் வைத்துள்ள தீர்வுத் திட்டத்தை சந்திரிகாவின் கட்சிக்குள்ளேயே பலத்த எதிர்ப்புக் கிளம்பி உள்ளது. மேலும் தேர்தல் வாக்குறுதியில் ஜனாதிபதியின் அதிகாரங்களை மீண்டும் பாராளுமன்றத்துக்கு அளிக்கப்படும் என்று சந்திரிகா கொடுத்த வாக்குறுதி கிடப்பில் போடப்பட்டுள்ளதை எதிர்கட்சிகள் குறை கூறி வருகின்றனர். விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்த சந்திரிகா அரசு தவறி விட்டது. இதனால் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளதால் மக்களின் எதிர்ப்பு மேலோங்கி வருகிறது. இவை அனைத்தையும் சமாளிக்க வேண்டுமானால் மக்களின் கவனத்தைத் திசை திருப்ப வேண்டும். அதற்கு பெரிதும் உதவக் கூடியது இனக்கலவரமே.

இன்றைய நிலையில் இனக்கலவரம் ஏற்படுவதை புலிகளும் வரவேற்பர். தற்போது சரிந்து வரும் இவர்களின் நிலையை தற்காலிகமாக நிலை நிறுத்த இந்தக் கலவரம் உதவும். அத்துடன் சிங்கள இராணுவத் தாக்குதலை சமாளிக்க முடியாத நிலையில் உள்ள புலிகளைக் காப்பாற்ற 1987 போன்று இன்னொரு நாடு தலையிடும் என்று எதிர்பார்க்கின்றனர். புலிகளுக்கு உதவ எந்த நாடும் முன் வராத நிலையில் அப்பாவித் தமிழ் மக்களை காப்பாற்ற இன்னொரு நாடு தலையிடும் நிலை ஏற்படாலம், இதன் மூலம் மிகவும் இக்கட்டான நிலையில் உள்ள புலிகள் தங்களைத் தயார்படுத்திக் கொள்ள அவகாசம் கிடைக்கும் என்று நம்புகின்றனர்.

சிங்கள அரசும், புலிகளும் தங்களின் பிரச்சனைக்கு தீர்வு காண மக்களின் அழிவையே நம்பி உள்ளனர். இதில் மிகவும் பாதிக்கப்படப் போவது அப்பாவித் தமிழ் மக்களே. இந்நிலையை நீடிக்க விடலாகாது. ஈழத் தமிழர்களை சிந்திக்க வேண்டுகிறோம். ஈழப் போராட்டத்தை துணிவோடு முகம் கொடுப்பது போல் அராஜகவாதிகளையும் துரோகிகளையும் எதிரிகளையும் துணிச்சலோடு எதிர்க்க வேண்டும். மக்கள் சக்தியே மகத்தான சக்தி, அதற்கு முன்னால் சர்வாதிகாரமும் அடி பணிந்தே தீரும். ●

## அந்நிய நாட்டு துாதரகங்களில் தமிழ் கட்சிகள்

தமிழ்க் கட்சிகள் என்று கூறிக்கொள்ளும் ஐந்து கட்சியினர், கடந்த ஒரு மாதமாக கொழும்பில் இருக்கும் அந்நிய நாட்டுத் துாதரகங்களுக்குச் சென்று ஆதரவு தேடி வருகின்றனர். ஒவ்வொரு நாட்டுத் துாதுவரிடமும் நீங்கள் தலையிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றனர். எப்படித் தலையிட வேண்டும் என்றும் கூறுகின்றனர்.

சந்திரிகா மிகவும் அற்புதமான தீர்வு ஒன்றினை முன் வைத்துள்ளார். இதனை விடுதலைப் புலிகள் முறியடிக்க முயற்சிக்கின்றனர்! புலிகள் ஒரு சர்வதேசப் பயங்கரவாத அமைப்பு! இதன் மூலம் உலக நாடுகளுக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்புண்டு! சந்திரிகாவை விட்டால் இலங்கைப் பிரச்சனைக்குத் தீர்வு காண இனி யாராலும் முடியாது! நாங்கள் தான் தமிழ் மக்களின் உண்மையான பிரதிநிதிகள். நாங்கள் ஐந்து கட்சிகள் தமிழ் மக்களினைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறோம். எனவே இலங்கையில் அமைதி திரும்ப நீங்கள் எங்களையும், சந்திரிகாவையும் ஆதரிக்க வேண்டும் என்று மிகவும் பணிவுடன் அடக்க ஒடுக்கமாக வரும் காலங்களில் விசாவுக்குப் போனால் மறுக்காமல் கிடைக்கத் தங்களை ஓர் அமைதியின் துாதுவர்களாகப் பணிவு காண்பித்து வருகின்றனர்.

புத்த பிக்குகளையும் இவர்கள் சந்தித்து ஆதரவு கோரியதையும் ஈழ மக்கள் அறிவார்கள். ஓர் புத்த பிக்கு இவர்களைக் காரசாரமாகக் கேள்வி கேட்க கோபம் கொண்ட குழு உறுப்பினர் ஒருவர் தேரோவுக்கு காட்டமாகவே பதில் சொல்லியுள்ளார்! வெளியேவந்த குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் இப்படியெல்லாம் பேசக்கூடாது! பணிவு, அடக்கம் தேவை அடிமைகள் நாங்கள் எப்படியெல்லாம் பேச வேண்டும் என்று அந்த உறுப்பினருக்கு ஓர் பாடமே நடத்தினராம்.

இந்த ஐந்து கட்சியினரும் எதற்காக இப்படி அலைகின்றனர் என்று எண்ணத் தோன்றும். வேறு யாரும் அல்ல, தேவானந்தே தான் இதற்கான சூத்திரதாரி! யாழ்ப்பாணத்தில் எஞ்சிய பகுதிகளையும் இராணுவம் கைப்பற்றியதும் வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு இடைக்கால நிர்வாகம் ஒற்றினை சந்திரிகா ஏற்படுத்தவுள்ளாராம். அப்படி ஏற்படுத்தப்படும் நிர்வாகத்தை டக்ளஸ் தேவானந்தேயிடம் ஒப்படைப்பதாக சிறிமாவின் மகள் வாக்குறுதி கொடுத்துள்ளார். கடந்த ஆண்டு சந்திரிகா அமெரிக்கா சென்றபோது தேவாந்தேயையும் அழைத்துச் சென்று புலிகள் பற்றி அவதூறாக அரசு வெளியிட்ட துண்டுப் பிரசுரங்களை இவரது கையில் கொடுத்து மாநாட்டுக்கு வந்திருந்த பிரதிநிதிகளிடம் வினியோகிக்கச் செய்தார். தமிழீழத்தையும் கொச்சைப் படுத்தும் அந்த அறிக்கைகளை தேவானந்தே விழுந்து விழுந்து பட்டுவாடா செய்துள்ளார். நாடு திரும்பியதும் இடைக்கால அரசு தனக்குத் தான் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையில் உணர்ச்சிவசப்பட்ட தேவானந்தே அங்கிருந்த மேசை மீது ஏறி விடுதலைப் புலிகளையும், விடுதலைப் போரையும் கொச்சையாகத் திட்டினார் என்றால் அவருக்கிருந்த அடிமைப்புத்தியையும் அதிகார ஆசையையும் என்னவென்று சொல்வது. நாடு திரும்பிய சந்திரிகா இவரைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. நேராகச் சந்திப்பதற்கு (Appointment) திகதி கேட்டு நாயாக அலைந்தார். அலைந்த பின்னர்தான் இவருக்கு அறிவு வந்தது. எப்படி என்கிறீர்களா? தானும் தனது கட்சியும் துரோகம் செய்தால் சந்திரிகா மதிக்க மாட்டார். எனவே எல்லா இயக்கங்களையும் தனது தலைமையில் திரட்டிக் கூட்டணி அமைத்து விசுவாசத்தைக் காண்பித்தால், சந்திரிகா மடங்கிவிடுவார் என்று தீர்மானித்து கொழும்பில் இருக்கும், EPRLF, PLOT, EROS, TELO ஆகியவற்றைத் தனது வாதத் திறமையினால் ஒன்று சேர்த்து சந்திரிகாவுக்காக ஏறக்கூடாதபடிகள் எல்லாம் ஏறி இறங்குகிறார் தேவானந்தே!

முரண்பட்டு நின்ற EPRLFக்கு மூன்று எம்.பி பதவிகளைத் தான் விட்டுத் தருவதாகக் கூறி பிரேமச்சந்திரனை தனது கூட்டணியில் இணைத்துக் கொண்டார் தேவானந்தே. செய்வது துரோகம் தானே இதிலென்ன முரண்பாடும், கொள்கையும் என்ற முடிவுக்கு வந்த பிரேமச்சந்திரன் தனக்கும் ஆயுதங்கள் வேண்டும் என்று கேட்டு வாங்கி இப்போது கிழக்கு மாகாணத்தில் புலிவேட்டையில் இறக்கியுள்ளார் தனது தோழர்களை! முன்பு ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டதாக அறிவித்திருந்தீர்களே! இப்போது மீண்டும் ஆயுதம் ஏந்தச் சொல்லியுள்ளீர்களே என்று தோழர்கள் கேட்டதற்கு, ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டதாகத் தான் சொன்னேனே தவிர புலி வேட்டையைக் கைவிட்டதாகச் சொல்லவில்லையே என்று மாற்றுக் கேள்வி கேட்டு அசத்தி எடுத்து விட்டார். கேள்வி கேட்ட தோழரை, திருநாவுக்கரசுக் கட்சியில் இருந்தவர்கள் தங்கள் தலைகளில் செருப்பால் அடித்துக் கொண்டதுபோன்று நாங்களும் அடித்துக் கொள்ள வேண்டியதுதான் என்று கூறிக் கொண்டு வெளியேறி விட்டார் தோழர்.

இந்த கூட்டணியில் பெரும் லாபம் சம்பாதிக்கப் போவது தேவானந்தேதான் என்பது ஏனைய நான்கு கட்சிக்கும் தெரியும். ஏனெனில் பிரேமதாசா இருக்கும்போ பிரேமதாசாவின் விசுவாசி, சந்திரிகா வந்த பின் சந் வின் விசுவாசி, இந்த மாதிரி எந்த தமிழ்த் துரோ இருந்ததில்லை. குமார சூரியர் சிறிமாவின் கட்சியில் இ தார். புலேந்திரன், இராசதுரை, யு.என்.பி.யில் இருந்த சிங்களக் கட்சி ஏதாவது ஒன்றில் இருந்து கொண்டு துரோகம் செய்தனர். ஆனால் ஆட்சிக்கு வந்த இரண்டு கட்சிகளையும் ஆதரித்து துரோகம் செய்வது தேவானந்தேக்கு த சாத்தியம். ஓர் நல்ல வியாபாரி, பிரேமதாசாவால் தம பிரதிநிதியாக்கப்பட்டுள்ளார்.

இவர்கள் இன்று அந்நிய துாதரகங்களில் ஆதரவு தேடுவது சந்திரிகாவைத் திருப்திப்படுத்துவதற்காக. ஆனால் இதன் மூலம் தமிழரது உரிமைகளைச் சீரழிக்கின்றனரே அல்லாமல் வேறேதும் செய்யவில்லை.

சிங்கள ஆட்சியாளரை நம்பிக் கெட்ட எத்தனையோ தமிழ்த் தலைவர்கள் விட்டுச் சென்ற பாடம்தான் தமிழீழம். அதனை வைத்துப் பிழைப்புத் தேடிய கூட்டம்தான் இந்த ஐந்து கட்சிகளும். சிங்கள ஆட்சியாளருக்குத் தேவை தமிழரை அழிக்கத் துணை நிற்கும தமிழர்கள்தான். காரணங்கள் பல கூறினாலும் விளைவு தமிழர்களை அழிப்பதாகத் தான் இருக்குமே தவிர உரிமையல்ல! சிங்களவர் தங்கள் கொள்கையில் தெளிவாக இருக்கின்றனர். தெளிவற்றி பது தமிழர்கள்தான். விடுதலைப் போரைக் கொச்சைபடுத்தியது இந்தக் கட்சிகள். வீணடித்தது விடுதலைப் புல கள், துன்பத்தை அனுபவிப்பதோ ஈழப் பொதுமக்கள், இழந்தவர்கள் பொதுமக்கள், ஈட்டிக் கொண்டவர்கள் கட்சிகள். விடுதலை என்ற சொல்லை உச்சரிக்கவே தகுதியிழந்த கொழும்புக் கட்சிகளை ஈழமக்கள் மன்னிக்கவே கூடாது.

◆◆

ஜனநாயக வழி முறைகளுக்கு மதிப்பளித்து தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பை பலப்படுத்துவோம்.

படிப்பகம்